# ஹாங்காங் விழிகள்

## 1

**ஹீ**ரோ ஹோண்டாவை அண்ணா சாலையின் அகலத்தில் விரட்டிக் கொண்டிருந்தான் சரண். பில்லியனில் ஒட்டிக் கொண்டிருந்தவள் வெண்ணிலா.

''சரண்...''

''என்ன?''

''என்னால் நம்ப முடியலை...''

''எதை?''

''இப்போ நாம யார் வீட்டுக்குப் போயிட்டிருக்கோம்?''

''ஃபேமஸ் சினி டைரக்டர் ஜெயக்கொடி பங்களாவுக்கு...''

''அதைத்தான் நம்ப முடியலை.''

''ஏன்?''

''ஜெயக்கொடி சாதாரணமான டைரக்டர் கிடையாது. தொடர்ச்சியா ஆறு தடவை தேசிய விருது பெற்ற டைரக்டர். போன வருஷம் பத்ம விபூஷன் பட்டம் வாங்கியவர். பனிரெண்டு சில்வர் ஜுபிளி படங்களைக் கொடுத்தவர். மல்டி மில்லியனர். இப்பேர்ப்பட்டவர் உங்களுக்கு போன் பண்ணி வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கார். நம்பவே கஷ்டமாயிருக்கு...''

சரண் சிரித்தான்.

''வெள்ளியங்கிரி மலை ஜோஸியர் சொன்னது சரியாப் போச்சு.''

''என்ன சொன்னார்...?''

''நீ இப்போ பார்த்துட்டிருக்கிற தொழிலை எந்தக் காரணத்துக்காகவும் விட்டுட வேண்டாம்... கூடிய சீக்கிரமே அந்தத் தொழில் உன்னை எட்டாத உயரத்துக்குக் கொண்டு போகும். பேரும், புகழும் கிடைக்கும்ன்னு சொன்னார்.''

''பணம்...?''

''அதுவும் கொட்டுமாம்...''

''பார்க்கலாம் பலிக்குதான்னு...''

''அதிர்ஷ்டம் இன்னிக்குத்தான் அடிக்கல் நாட்டு விழா நடத்தியிருக்கு...''

''உங்களையும் என்னையும் அவர் எதுக்காகக் கூப்பிட்டிருப்பார்னு நினைக்கறீங்க சரண்...?''

''நம்ம 'ஸ்கை வ்யூ' டிடெக்டிவ் ஏஜென்ஸியைப் பத்திக் கேள்விப்பட்டிருப்பார். ஏதாவது ஒரு பிரச்னையை சால்வ் பண்ணிக்கிறதுக்காக உன்னையும் என்னையும் வரச் சொல்லியிருக்கார்...''

பைக் க்ரீன்வேஸ் ரோட்டில் வேகம் குறையாமல் திரும்பியது.



''சரண்...! இப்ப நீங்க சொன்னதும் ஒத்துக்கற மாதிரி இல்லை...''

''ஏன்?''

''இந்த மெட்ராஸ்ல எத்தனையோ திறமையான டிடெக்டிவ் ஏஜென்ஸீஸ் இருக்கு. நம்ம டிடெக்டிவ் ஏஜென்ஸி ஒரு சோட்டா. பிறந்து மூணு மாசமே ஆன ஒரு குழந்தை மாதிரி. அவர்க்கு ஏதாவது பிரச்னைன்னா மூணு மாசக் குழந்தை கிட்டயா வந்து யோசனை கேட்பார்...?''

''எப்படியோ... அவரே ஃபோன் பண்ணிப் பேசியிருக்கார்! சரியா ஆறு மணிக்கு அப்பாய்ண்ட்மெண்ட். இப்போ போயிட்டிருக்கோம். என்ன சொல்லப் போறார்ன்னு பார்ப்போம்...''

''இப்ப மணி என்ன...?''

''பைவ் ஃபார்ட்டி ஃபைவ்...''

''பதினஞ்சு நிமிஷத்துல போயிடலாமா?''

''போயிடலாம்...''

க்ரீன்வேஸ் ரோட்டின் போக்குவரத்தில் ஹீரோ ஹோண்டா ஒரு செலுத்தப்பட்ட அம்பு மாதிரி பாய்ந்து பத்து நிமிஷங்களைக் கரைத்து விட்டு டைரக்டர் ஜெயக்கொடி குடியிருக்கும் 'ப்ளஸண்ட் கார்டன்ஸ்' அவென்யூக்குள் நுழைந்தது.

அவென்யூ முழுக்க லட்சங்களால் குளிப்பாட்டப்பட்ட பங்களாக்கள். வாசல்களில் சாயம் போன யூனிஃபார்ம்களில் வாட்ச்மேன்கள். அந்த சாயந்தர நேரத்தில் அவென்யூ நிசப்தமாய் இருந்தது. ஏதோ ஒரு பங்களாவில் நாய் ஒன்று குரைக்கும் சத்தத்தைத் தவிர மற்றபடி கப்சிப்.

''சரண்! இன்னிக்குத்தான் நான் இந்த ஏரியாவுக்குள்ள வர்றேன். என்ன இவ்வளவு சைலண்டா இருக்கு...?''

''இது பணக்கார வர்க்க ஏரியா. பங்களாவுக்குள்ள அநாவசியமான கும்பல் இருக்காது. குழாயடி சண்டை கிடையாது.

ஒவ்வொரு பங்களாவையும் பார்த்தியா? ஐயாயிரம் சதுர அடி... பத்தாயிரம் சதுர அடின்னு இருக்கு. இவ்வளவு பெரிய பங்களாவுக்குள்ளே கணவன் ஒரு ரூம்லேயும், மனைவி ஒரு ரூம்லேயும் உட்கார்ந்து அவங்கவங்க வேலைகளைப் பார்த்துட்டிருப்பாங்க... சத்தம் எப்படி வெளியே வரும்... இங்கே வீசற காத்துகூட பணக்காரனுக்குப் பயந்துதான் வீசும்...''

''சரி...! டைரக்டர் ஜெயக்கொடியோட பங்களா நெம்பர் எவ்வளவு?''

''இருபத்தி மூணு...''

வெண்ணிலா அந்த விநாடி பார்வைக்குக் கிடைத்த பங்களாவைப் பார்த்தாள்.

''பதினாலு...''

''இன்னும் கொஞ்சம் முன்னாடி போகணும்...''

போனார்கள்.

மரங்கள் அடர்ந்த - சாலையின் வளைவில் அந்த இருபத்தி மூன்றாம் நெம்பர் பங்களா எழுபது சதவீத க்ரானைட் உடம்போடு பரவியிருந்தது.

காம்பௌண்ட் கேட் முகப்பில் வெள்ளை மார்பில் துண்டு 'ஜெயக்கொடி' என்று சொன்ன ஆங்கில எழுத்துக்களைக் காட்டியது.

சாத்தியிருந்த காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் நின்று பைக் ஹார்னை சப்திக்க - கேட்டின் மூலையில் இருந்த ஒரு சின்ன சதுரக் கதவு திறந்து வாட்ச்மேனின் மீசை முகம் எட்டிப் பார்த்தது.

''யாரு...?''

''டைரக்டரைப் பார்க்கணும்...''

''உங்க பேர் சரணா...?''



''ஆமா...''

கேட் உடனே கொஞ்சமாய்ப் பின்வாங்கியது.

''உள்ளே போங்க... அய்யா முன்னாடி ரூம்ல உங்களுக்காகத்தான் காத்திட்டிருக்கார்.''

சரண் பைக்கை உள்ளே செலுத்தினான்.

முதல் பார்வைக்கே அந்த மிகப்பெரிய 'லான்' பச்சை பெயிண்ட்டை லிட்டர் லிட்டராய் கொட்டினாற் போல் கிடைத்தது. போர்டிகோ வரைக்கும் ரோஜாத் தொட்டிகள் ஆர்வோ கலர்களில் பூக்களைக் காட்டின. போர்டிகோவில் ஒரு பென்ஸ் காரும், மாருதி 'ஜென்'னும் செந்நிற சிவப்பில் தெரிந்தன.

வெண்ணிலா மெல்ல உதட்டைக் குவித்து விசிலடித்தாள்.

''வாவ்...! இதென்ன பங்களாவா... இல்லை தேவ லோகத்து நந்தவனமா...?''

''பணம்...! எல்லாம் பணம்...''

''செமத்தியான பார்ட்டி மாட்டியிருக்கு... சரண்! இதை நல்லபடியா உபயோகப்படுத்திக்கணும்...''

பைக் போர்டிகோவில் போய் நின்றது. இருவரும் இறங்கி தயக்க நடையோடு போர்டிகோ படிகளில் ஏற ஒரு வேலைக்காரன் பவ்யமாய் எதிர்ப்பட்டான்.

''அய்யா முன்னாடி ரூம்லதான் இருக்கார். இந்த பக்கமா வாங்க...''

கூட்டிப் போனான்.

முன்பக்க அறைக்கதவு விரியத் திறந்திருக்க, உள்ளே சோபாவில் பத்திரிகை படித்துக் கொண்டு ஜெயக்கொடி தெரிந்தார்.

விளம்பரப் போட்டோக்களிலும், டி.வி. திரைகளிலும் பார்த்துப் பார்த்து பழக்கப்பட்ட முகம்.

சதைப் பிடிப்பான சதுர முகம். கோல்ட் ப்ரேம் கண்ணாடி. முழு வழுக்கைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் தலை. பார்க்கிற இந்த நிமிஷம் பிங்க் நிற சிங்கப்பூர் லுங்கி ஜிப்பாவில் இருந்தார். மார்பு ரோமக் காட்டுக்கு இடையே தங்கச் சங்கிலி ஸ்வஸ்திக் டாலரோடு புரண்டது. லாவண்டர் டெனிம் செண்ட் மல்லிகைப் பூக்களைக் கூடை கூடையாய் கொட்டியதைப் போல் மணத்தது.

''வணக்கம் ஸார்...''

சரணும், வெண்ணிலாவும் ஒரு சேரக் கைகளைக் குவித்தார்கள்.

''வாங்க...''

ஜெயக்கொடி புன்னகைத்துத் தனக்கு எதிரே இருந்த நாற்காலிகளைக் காட்ட இரண்டு பேரும் தயக்கமாய் அந்த பிரம்பு நாற்காலிகளுக்கு சாய்ந்தார்கள்.

பார்த்துக் கொண்டிருந்த பத்திரிகையை மடித்தபடியே ஜெயக்கொடி கேட்டார்.

''என்ன சாப்ட்றீங்க...?''

''ஒண்ணும் வேண்டாம் ஸார்... கிளம்பும் போதுதான் டீ குடிச்சோம்...''

''சரி... அப்படின்னா கூல்ட்ரிங்க் குடிங்க...'' சொன்னவர் இண்டர்காமில் தகவல் கொடுத்து விட்டு அவர்களை ஏறிட்டுப் புன்னகைத்தார். கேட்டார்.

''நீங்க ரெண்டு பேரும் கணவன் மனைவியா?''

''இல்லை ஸார்...''

''பின்னே..?''



''கணவன் மனைவியாகப் போறவங்க...''

''அதாவது லவ்வர்ஸ்...?''

''ஆமா ஸார்...''

''ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியை ஆரம்பிக்கணும்கிற எண்ணம் உங்க ரெண்டு பேருக்கும் எப்படி வந்தது?''

''அது... வந்து... ஸார்... நாங்க காலேஜ்ல படிக்கும்போதே லவ்வர்ஸ். படிச்சு டிகிரி வாங்கினதும் வேலைக்காக முயற்சி பண்ணினோம். வேலை கிடைக்கலை. வெண்ணிலாவுக்கு மட்டும் ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியில் வேலை கிடைச்சுப் போயிட்டிருந்தா... ஒரு ஆறு மாசம் வேலைக்குப் போயிருப்பா... அதுக்கப்புறம் அந்த ஏஜென்ஸியின் பாஸ் வெண்ணிலா கிட்ட மிஸ்பிஹேவ் பண்ணப் போக அவ வேலைக்கு டாட்டா சொல்லிட்டு வந்துட்டா. வெண்ணிலாவுக்கு அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸியில் வேலை பார்த்த அனுபவம் இருந்ததால்... நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து 'ஸ்கை வ்யூ டிடெக்டிவ் ஏஜென்ஸி'ங்கிற பெயர்ல தைரியமா இந்தத் தொழிலைத் தொடங்கிட்டோம்.''

''தொழில் எப்படி... பரவாயில்லையா?''

''ஏதோ போயிட்டிருக்கு ஸார்... ஆரம்பிச்சு மூணு மாசம்தான் ஆச்சு. போகப் போக 'பிக்-அப்' ஆகும்னு நினைக்கிறோம்...''

''இதுவரைக்கும் எத்தனை கேஸ்களை டீல் பண்ணியிருப்பீங்க...?''

''ஏழெட்டு இருக்கும் ஸார்... எல்லாமே சில்லரைக் கேஸ்கள் ஸார்... திறமையைக் காட்ட சந்தர்ப்பமே கிடைக்கலை...''

பாட்டில்களில் மிரண்டா வந்தது.

"எடுத்துக்குங்க..."

சரண், வெண்ணிலா ஜில்லிப்பில் வியர்த்துப் போயிருந்த பாட்டில்களை எடுத்துக் கொண்டார்கள்.

ஜெயக்கொடி தொடர்ந்தார்.

"உங்க ரெண்டு பேரையும் நான் எதுக்காக வரவழைச்சிருப்பேன்னு உங்களால கெஸ் பண்ண முடியுதா...?"

சரண் கேட்டான்.

"ஏதாவது பிரச்னையா ஸார்...?"

"ஒரு வகையில பார்த்தா அது பிரச்னைதான். இன்னொரு கோணத்துல பார்த்தா அதுக்கு அப்படி ஒரு பெயர் கொடுக்க முடியாது... இருந்தாலும் அந்த விஷயத்துல உங்க உதவி எனக்குத் தேவை."

"சொல்லுங்க ஸார்..."

ஜெயக்கொடி சில விநாடிகள் நிதானித்து விட்டுக் கேட்டார்.

"உங்க ரெண்டு பேர்க்கும் பாஸ்போர்ட் இருக்கா?"

"இல்ல ஸார்."

"வாரம் பத்து நாள்ல உங்களால பாஸ்போர்ட் எடுக்க முடியுமா?"

"எதுக்கு ஸார்..."

"உங்க ரெண்டு பேரையும் நான் ஹாங்காங் அனுப்பப் போறேன்... பத்து பதினைந்து நாள் நீங்க ஹாங்காங்ல தங்கியிருக்க வேண்டி வரலாம்..."

சரணும், வெண்ணிலாவும் திகைப்பாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.



## 2

வைதேகி அந்தக் காலை நேரத்தில் ஆபீஸ் புறப்பட்டுப் போகும் அவசரத்தில் இருந்தாள்.

புடவையைச் சுற்றிக் கொண்டு எண்ணெய் வழியும் முகத்திற்குப் பவுடர் பூச நினைத்து கோகுல் சாண்டல் பவுடர் டப்பாவை எடுத்து உள்ளங்கையில் கொட்ட முயல டப்பாவிலிருந்து வெறும் காற்றுதான் வந்தது.

வைதேகி எரிச்சலாகிக் கத்தினாள்.

"ஏய்... சிந்து..."

பதினெட்டு வயது சிந்து சமையலறையிலிருந்து கரி படிந்த முகத்தோடு வேகவேகமாய் வந்தாள்.

"என்னக்கா...?"

"ஒரு பவுடர் டப்பாவை வாங்கினா ஒரு மாசத்துக்குக் கூட வர்றதில்லை. பௌடரை என்னடி பண்றே...? திங்கறியா...?"

"அய்யோ அக்கா...! பவுடர் இவ்வளவு சீக்கிரம் காலியாறதுக்கு என்ன காரணம் தெரியுமா?"

"சொல்லு..."

"பக்கத்து வீட்டு மைத்ரேயி வந்து நான் வீட்ல இல்லாத சமயம் பார்த்து மூஞ்சி நிறைய அப்பிட்டுப் போயிடறா..."

"அம்மா வீட்லதானே இருப்பாங்க... கண்டிக்க வேண்டியதுதானே...?"

முன்பக்க அறையில் உட்கார்ந்து அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த அம்மாக்காரி ஞானம் குரல் கொடுத்தாள்.

"அந்த பக்கத்து வீட்டு மைத்ரேயி பிசாசு நான் அசந்து தூங்கிட்டிருக்கிற நேரமாப் பார்த்து வருது. பௌடரைக் கை நிறைய கொட்டிகிட்டுப் போயிடுது... ஒரு தடவை கண்டிக்கப் போய் அவ அம்மாக்காரி வாரிக் கட்டிக்கிட்டு சண்டைக்கே வந்துட்டா... என்னால அவகிட்டே வாயாட முடியலை."

"இனிமே பவுடர் டப்பாவை பீரோவுக்குள்ளே எடுத்து ஒளிச்சு வையுங்க. வாங்கற இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்துல இது மாதிரியான தண்டச் செலவுகள் வேற. ஏய் சிந்து... ஸ்டிக்கர் பொட்டு எங்கேடி...?"

"இதோ... கண்ணாடியிலேயே ஒட்டியிருக்கே..."

"இன்னிக்கு ஆபீஸ்ல ஏகப்பட்ட டைப்பிங் வேலை. பத்து விரலும் தெறிச்சே போயிடும்... சாயந்தரம் நான் வீட்டுக்கு வர நேரமாகும். வெளியே வந்து நின்னுகிட்டு ரெண்டு பேரும் தவம் பண்ற மாதிரி காத்துட்டிருக்காதீங்க..."

கண்ணாடியில் அப்பியிருந்த ஸ்டிக்கர் பொட்டை எடுத்து நெற்றிக்கு இட்டுக் கொண்ட வைதேகி சுவர்க் கடிகாரத்தைப் பார்த்து விட்டுப் பரபரத்தாள்.

"அச்சச்சோ! மணி ஒன்பதரை. நான் கிளம்பறேன். சிந்து...! என்னோட டிபன் பாக்ஸை எடு..."

"இந்தாக்கா..."

"இன்னிக்கு என்ன சாதம்...?"

"தயிர் சாதம்..."

"ஊறுகாய் பத்தை வெச்சியா...?"

"ம்... ஒண்ணுக்கு ரெண்டா வெச்சிருக்கேன்..." வைதேகி ப்ளாஸ்டிக் ஒயர் பேக்கில் டிபன் பாக்ஸை அதக்கிக் கொண்டு காலுக்கு ஸ்லிப்பரை மாட்டிக் கொண்டு வாசற்படி இறங்கினாள்.



"அம்மா...! நான் வர்றேன்..."

"பத்திரமா போய்ட்டு வாடி...! ரெண்டு நாளா எவனோ ஒருத்தன் உம் பின்னாடியே வர்றதா சொன்னியே...!"

"நேத்திக்கே அவனுக்குக் கொடுக்க வேண்டியது கொடுத்துட்டேன். சாயந்தரம் வர்றப்ப புது ஸ்லிப்பர் வாங்கணும்..."

வைதேகி பேசிக் கொண்டே தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்து தெருக்கோடியில் இருந்த பஸ் ஸ்டாப்பை நோக்கிப் போனாள்.

9.35 பஸ்ஸைத் தவறவிட்டால் பத்து மணிக்கு நிச்சயமாய் ஆபீஸ் சேர முடியாது.

வேகமாய் நடந்தாள்.

எதிர்ப்பட்ட மரத்தடிப் பிள்ளையார்க்குத் தன்னிச்சையாய் ஒரு கும்பிடைப் போட்டு விட்டு ரோட்டை க்ராஸ் செய்தவளை - எதிரே சைக்கிளில் வந்த போஸ்ட்மேன் "அம்மா! ஒரு நிமிஷம்!" என்று சொல்லி ப்ரேக் போட்டு நிறுத்தினார்.

வைதேகி நின்றாள்.

போஸ்ட்மேன் கட்டைப் பிரித்து விண்டோ கவர் ஒன்றை எடுத்து நீட்டினார்.

"உங்களுக்கு ஒரு தபால் இருக்கம்மா."

வாங்கிப் பார்த்தாள்.

கூட்டுறவு பேங்கிலிருந்து அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தார்கள்.

'பஸ்ஸில் போகும்போது படித்துக் கொள்ளலாம்.'

போஸ்ட்மேனுக்கு ஒரு நன்றிப் புன்னகையைக் கொடுத்து விட்டு நடையைப் பெயர்க்க ஆரம்பித்தாள்.

கக்கங்கள் வியர்த்துப் போக இரண்டு நிமிஷ நடை

பஸ் ஸ்டாப் வந்தது.

ஷெல்டரில் சொற்ப கூட்டம். ஸ்கூல் யூனிஃபார்ம்களில் சிறுமிகள்.

அவர்களோடு போய் சேர்ந்து கொண்டாள். ஒரு சிறுமியிடம் கேட்டாள்.

"32-சி இன்னும் வரலையே...?"

"வரலேக்கா..." சொன்ன சிறுமி சில விநாடிகளுக்கு வைதேகியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பக்கத்தில் இருந்த சிறுமியிடம் குனிந்து மெல்லிய குரலில் சொன்னாள்.

"டீ... அந்த அக்கா எவ்வளவு செகப்பா அழகா இருக்காங்க பார்த்தியா...?"

"நா... தெனமும் இந்த அக்காவைப் பார்ப்பேனே."

வைதேகிக்கு அவர்கள் பேச்சு காதில் விழுந்தாலும் அதில் ஆர்வம் காட்டாமல் பஸ்ஸின் முகம் தூரத்தில் தெரிகிறதாவென்று பார்த்துவிட்டுக் கையிலிருந்த கடிதக் கவரின் வாயைக் கிழித்தாள்.

தமிழில் டைப் அடித்த கடிதம் அது.

முதல் எச்சரிக்கை நோட்டீஸ் என்ற எழுத்துக்கள் சிவப்பு மையில் தெரிய கீழே எழுத்துக்கள் ஓடின.

**எங்களது வங்கியில் வீ/ச/எண் 1479படி உங்கள் வீட்டுப் பத்திரத்தை அடகு வைத்து ரூபாய் இரண்டு லட்சம் கடன் வாங்கிய வகையில் இதுவரையிலும் நீங்கள் அசல் தொகையையோ, வட்டித் தொகையையோ ஒரு தவணை கூட செலுத்தவில்லை. வங்கி விதிகளின்படி கடன் வாங்கிய இரண்டு வருட காலத்தில் - குறைந்தது ஐந்து தடவையாவது வட்டித் தொகை**



**கட்டப்பட்டு இருக்க வேண்டும். அப்படித் தாங்கள் கட்டத் தவறியதால் அடமானம் வைத்த உங்கள் வீட்டை கோர்ட்டின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு ஜப்தி செய்ய சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்த ஜப்தி நடவடிக்கையை நீங்கள் தவிர்க்க விரும்பினால் இந்த எச்சரிக்கை நோட்டீஸ் கண்ட ஒரு மாத காலத்திற்குள் முழுத் தொகையான இரண்டு லட்சத்தையும் கட்டுமாறு கோரப்படுகிறீர்கள்.**

**இப்படிக்கு**

**வங்கி நிர்வாகம்.**

கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் மூச்சு முட்டி வியர்த்தது. நடுக்கத்தோடு கடிதத்தைப் பைக்குள் திணித்துக் கொண்ட விநாடி.

32-ஏ பஸ் வந்து நின்றது.

ஓடிப்போய் ஏறிக் கொண்டாள்.

பஸ்ஸில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை. அவளுடைய ஆபீஸ் கலீக் பவித்ரா கையசைத்துக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டாள்.

பஸ் கிளம்பியது.

பவித்ரா வைதேகியின் முகத்தைப் பார்த்து விட்டுக் கேட்டாள். "என்ன வைதேகி... இன்னிக்கு இப்படி வேர்த்து வழிஞ்சு எதையோ பறி கொடுத்த மாதிரி இருக்கே..."

"ஒ... ஒ... ஒண்ணுமில்லை..."

"அப்படீன்னு உன் உதடு சொன்னாலும் கண்ணுல எல்லாமே அப்பட்டமாத் தெரியுதே...!

'இனி இவள் விடமாட்டாள். விஷயத்தைக் கறக்கிற வரை இவள் வாய் ஓயாது!'

"என்ன பேச்சையே காணோம்...?"

பேங்க் லெட்டரை எடுத்துக் கொடுத்தாள் வைதேகி.

"இந்தா... படி..."

பவித்ரா வாங்கிப் படித்து விட்டுப் பதட்டமானாள்.

"என்ன வைதேகி... இது...? வீட்டை அடகு வெச்சு எதுக்காக ரெண்டு லட்சம் ரூபாய் பணம் வாங்கினே...?"

வைதேகி கசப்பாய் புன்னகைத்தாள்.

"பின்னே... என்னோட கல்யாணம் எப்படி நடந்ததுன்னு நினைக்கிறே...?"

பவித்ரா சிறிது மௌனித்து விட்டுக் கேட்டாள்.

"சரி! உன்னோட கல்யாணத்துக்காக கடன் வாங்கினே! அந்தக் கடனுக்கு வட்டியையாவது மாசா மாசம் கட்ட வேண்டாமா...? இப்படி வார்னிங் நோட்டீஸ் வர்ற வரைக்கும் விடலாமா...?"

"முடியலையே... நான் வாங்கற சம்பளம் வீட்டுச் செலவுகளுக்கே சரியாப் போயிடுது... இதுல வாங்கின கடன், அதுக்குக் கட்ட வேண்டிய வட்டி எப்படி ஞாபகத்துக்கு வரும்...?"

"சரி... இப்ப இதுக்கு என்ன பண்ணப் போறே...?"

"தெரியலை. ஒரே குழப்பமாயிருக்கு. தொகை பெரிசு. யார்கிட்டப் போய் கடன் கேட்க முடியும்...?"

பவித்ரா முகம் வாடச் சொன்னாள். "வைதேகி! உன்னோட வாழ்க்கையைப் பத்தி நினைக்கும்போது எனக்கு அந்தக் கடவுள் மேலேயே கோபம் கோபமா வருது. கல்யாணச் செலவுகளுக்காக வீட்டை அடமானம் வெச்சிருக்கே! அந்தக் கல்யாண வாழ்க்கையாவது நிலைச்சதா என்ன? கல்யாணமான மூணே மாசத்துல உன்னோட கணவர் லாரி விபத்துக்குப் பலி. அப்பாவை சின்ன வயதிலேயே இழந்துட்ட உனக்கு அடுக்கடுக்கா இப்படிக் கஷ்டங்கள் வரக் கூடாது."



பஸ் ஒரு ஸ்டாப்பிங்கில் நின்றுவிட்டு நகர்ந்தது. பவித்ரா தொடர்ந்தாள்.

"இந்த பேங்க் லெட்டர் விஷயம் உன்னோட அம்மாவுக்குத் தெரியுமா...?"

"தெரியாது."

"சொல்லிடாதே..."

"சொல்லாமே எப்படி இருக்க முடியும் பவித்ரா?"

"அம்மாவுக்குத் தெரியாம பேங்க் பிரச்னையை சால்வ் பண்ண முயற்சி எடுத்துக்க வேண்டியதுதான்..."

"எப்படி...?"

"ஒரு வழி இருக்கு..."

"என்ன வழி! சொல்லு...?"

# 3

சரணும் வெண்ணிலாவும் திகைத்த பார்வைகளோடு டைரக்டர் ஜெயக்கொடியைப் பார்த்தார்கள்.

"ஸார். நீங்க என்ன சொல்றீங்க...? எங்க ரெண்டு பேரையும் ஹாங்காங் அனுப்பப் போறீங்களா...?"

"ஆமா..."

"எதுக்கு ஸார்...?"

"அங்கே நீங்க பார்க்க வேண்டிய வேலை ஒண்ணு இருக்கு."

"என்ன வேலை ஸார்...?"

ஜெயக்கொடி டீபாயின் மேல் வைத்திருந்த ஒரு ப்ளாஸ்டிக் கவரை எடுத்து அதற்குள் இருந்த போட்டோ

ஒன்றை உருவி சரணிடம் நீட்டினார். "இந்தப் போட்டோவைப் பாருங்க."

சரணும், வெண்ணிலாவும் பார்த்தார்கள்.

போட்டோவில் ஒரு இளைஞன் 'டை' கட்டிக் கொண்டு அழகாய் சிரித்தான்.தலை கொள்ளாத கேசம். கனிசமான 'கரு கரு' மீசை. அவன் ரோஜா நிறத்துக்குரிய நபர் என்பது போட்டோவிலேயே தெரிந்தது.

சரண் கேட்டான்.

"யார் ஸார் இந்த யூத்...?"

"இது எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா வரப்போற பையன். பி.ஈ. கம்ப்யூட்டர் சயின்ஸ். எம்.சி.ஏ. அண்ட் எம்.பி.ஏ. ஹாங்காங்கில் இருக்கிற மிகப் பெரிய ரிட்ஜ் கம்பெனியில் ஒரு லட்சம் டாலர் சம்பளத்துல வேலை. மாப்பிள்ளைப் பையன் போட்டோவில் பார்க்க டபுள் ஓக்கே. ஆனா என்னோட பொண்ணுக்கு அழகான மாப்பிள்ளையைக் காட்டிலும் நல்ல கேரக்டர்ஸ் உள்ள மாப்பிள்ளைதான் வேணுமாம். வெளிநாட்டில் இருக்கிற அந்தப் பையனோட கேரக்டர் எப்படின்னு தெரியணும். அவனுக்கே தெரியாமே அவனை க்ளோஸா ஃபாலோ பண்ணி கேரக்டரை ஸ்டடி செய்யணும்."

"புரியுது ஸார்..."

"என்ன புரியுது...?"

"வேலை செய்யற இடத்தில் அவனுடைய பிஹேவியர்ஸ் எப்படி...? வேலை முடிஞ்சதும் கம்பெனியிலிருந்து எங்கே போறான்? யார் யாரைப் பார்த்துப் பேசறான்... பெண் சிநேகிதிகள் உண்டா? சிகரெட், லிக்கர் பழக்கம் உண்டா...? மத்தவங்க அபிப்பிராயத்துல அவன் எப்படி...? இது மாதிரியான விஷயங்கள்தானே ஸார்...?"



"ஆமா..."

"ஸ்டடி பண்ணிடலாம் ஸார்."

"இதுல மிக முக்கியமான விஷயம் எது தெரியுமா?"

"தெரியும் ஸார்...! மாப்பிள்ளைப் பையனுக்கு அவன் கண்காணிக்கப்படறது தெரியவே கூடாது..."

"அதேதான்...! இந்த கண்காணிக்கிற வேலை தவிர வேற எந்த வேலையும் உங்க ரெண்டு பேர்க்கும் ஹாங்காங்கில் கிடையாது. இதுக்கு நீங்க அதிக சிரமப்பட வேண்டியது கூட இல்லை."

"நாங்க என்னிக்கு ஸார் புறப்படணும்...?"

"பாஸ்போர்ட் விசாவுக்கு ஏற்பாடு பண்ணி அது கைக்கு கிடைச்ச ஒரு வாரத்துக்குள்ள நீங்க ஃப்ளைட் ஏறிடலாம்... பாஸ்போர்ட் விசாவுக்கு நானே ஏற்பாடு பண்றேன்..."

"எங்களை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைச்ச உங்களுக்கு எங்களோட நன்றி ஸார்..."

"எனக்கு வேண்டியது நன்றி இல்லை. துல்லியமான ரிப்போர்ட். பையன் யோக்யமானவனா இருந்தாத்தான் என் பொண்ணோட வாழ்க்கை நல்லபடியா அமையும். ஸோ, ஹாங்காங்க்ல நீங்க இருக்கப் போகிற ஒவ்வொரு நிமிஷமும் உங்க ரெண்டு பேரோட பார்வையும் அந்த மாப்பிள்ளைப் பையன் மேல்தான் இருக்கணும்..."

"இருக்கும் ஸார்..."

"சரி பாஸ்போர்ட்டும் விசாவும் ரெடியானதும் உங்களுக்கு போன் பண்றேன். அப்ப நீங்க வந்தா போதும்..."

சரணும், வெண்ணிலாவும் எழுந்து கை குவித்து விடை பெற்றுக் கொண்டார்கள்.

# 4

**வை**தேகி மறுபடியும் பவித்ராவிடம் கேட்டாள்.

"என்ன வழி... சொல்லு..."

"இந்த நோட்டீஸ் விட்ட பாங்க் மானேஜரைப் போய்ப் பாரு..."

"பார்த்து...?"

"பணத்தைக் கட்டறதுக்கு அவகாசம் கேளு..."

"அவகாசம்ன்னா எத்தனை நாளு...?"

"ஆறு மாசம் கேளு..."

"அவகாசம் ஆறு மாசம் தந்தா மாத்திரம் பணத்தைக் கட்டிட முடியுமா என்ன?"

"கட்ட முடியாதுதான்... ஆனா வீட்டை ஏலத்திலிருந்து காப்பாத்திடலாம்..."

"எப்படி...? ஆறுமாசம் கழிச்சு மறுபடியும் பேங்க்கிலிருந்து எச்சரிக்கை நோட்டீஸ் வருமே..."

"அதுக்குள்ள அந்த வீட்டை ஒரு நல்ல விலைக்கு வித்து பேங்க்குக்கு கட்ட வேண்டிய பணத்தைக் கட்டிட்டு மீதி பணத்துல சிட்டி அவுட்டர்ல சின்னதா வீடு வாங்கிக் குடி போயிடு..."

"வீட்டுப் பத்திரம் பேங்க்ல இருக்கே...?"

"நோ ப்ராப்ளம். பத்திரத்தோட ஜெராக்ஸ் காப்பி உங்க கிட்ட இருக்கா இல்லையா...?"

"இருக்கு..."



"அது போதும்... வீட்டை வாங்க வர்றவங்ககிட்ட ஜெராக்ஸ் காப்பியைக் காட்டி விபரம் சொல்லி அக்ரிமெண்ட் போட்டுக்க வேண்டியது. அக்ரிமெண்ட் போட்டா எப்படியும் ஒரு கணிசமான தொகை கைக்கு வரும். அந்தப் பணத்தை பேங்க்ல கட்டிட்டா ஒரிஜினல் பத்திரம் கைக்கு வந்துடும்..."

"அக்ரிமெண்ட் போட்டா அட்வான்ஸா ரெண்டு லட்சம் கிடைக்குமா...?"

"உன் வீட்டோட மதிப்பு எவ்வளவு இருக்கும்ன்னு நினைக்கிறே...?"

"எனக்குத் தெரியலை.."

"என்னோட மதிப்புப்படி ஆறேழு லட்சத்துக்குப் போகும். ஏன்னா டவுனுக்குள்ளே இது மாதிரி சைட் கிடைக்காது. நீ உன்னோட வீட்டை விக்கிறதுக்கு ரெடின்னு சொன்னா வாங்கறதுக்குப் பல பேர் வரலாம்."

"நீ சொல்றதெல்லாம் நடக்கும்ன்னு எனக்குத் தோணலை. பவித்ரா... பொட்டப்புள்ள நான் ஒருத்தி இந்த வீட்டு விவகாரத்துல என்ன பண்ண முடியும்...?"

பவித்ரா புன்னகைத்தாள்.

"நீ மன தைரியத்தை இழந்துடாமே பேங்க் மானேஜரைப் போய்ப் பாரு... ஆபீஸ் போனதும் பதினோரு மணிக்கு மேல் ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுட்டுப் போயிடு..."

வைதேகி நீளமாய் பெருமூச்சு விட்டாள்.

"போய்ப் பார்க்கிறேன்."

பேச்சு ஒரு முடிவுக்கு வந்திருந்தபோது பஸ்ஸூம் அவர்கள் இறங்க வேண்டிய ஸ்டாப்பிங்கைத் தொட்டிருந்தது.

இறங்கி நடந்தார்கள்.

நூறு மீட்டர் தூரத்தில் ஆபீஸ் ஐந்து மாடிகளோடு தெரிந்தது. டைம் ஆபீஸில் எண்ட்ரி கொடுத்துவிட்டு உள்ளே போனார்கள்.

பவித்ரா இரண்டாவது மாடிக்கும், வைதேகி நான்காவது மாடிக்கும் அவரவர் செக்ஷன் பார்த்துப் பிரிந்தார்கள்.

வைதேகி தன்னுடைய செக்ஷனுக்குள் பிரவேசித்துத் தன்னுடைய நாற்காலிக்கு சோர்வோடு சாய்ந்தாள்.

'இந்த ரெண்டு லட்சக் கடனை எப்படி அடைப்பது?'

'பவித்ரா சொன்ன மாதிரியெல்லாம் செய்ய முடியுமா என்ன?'

எல்லாக் கவலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு - டைப்பிங் மெஷின் போர்த்திக் கொண்டிருந்த பிளாஸ்டிக் உறையை உருவினாள் வைதேகி.

டைப் அடிக்க வேண்டிய லெட்டர்கள் மானேஜரின் கிறுக்கெழுத்துக்களில் கற்றை கற்றையாகத் தெரிந்தது.

முதல் கடிதத்தை அடிக்க ஆரம்பித்து முடிப்பதற்குள் எதிர் மேஜையில் இருந்த ஹெட் க்ளார்க் குரல் கொடுத்தார்.

''அம்மா! வைதேகி...!''

''ஸார்...!''

''உனக்கு போன்...?''

''எனக்கா...?''

''ஆமாம்மா...! இந்த ஆபீஸ்ல நீ ஒருத்திதானே வைதேகி...? போன் பண்ணினவர் உன்னோட பேரைத் தான் சொல்றார். அது யாரு... என்னான்னு வந்து நீயே கேளு...''

வைதேகி ஆச்சர்யப்பட்டுக் கொண்டே எழுந்தாள்.

'இது யாருடைய போன்...? வெளியிலிருந்து இதுவரைக்கும் எந்த ஒரு நபரும் எனக்கு போன் பண்ணினது இல்லையே?'

வேகமாய்ப் போய் ரிசீவரை எடுத்தாள்.

''ஹலோ...''



ஒரு ஆண் குரல் கேட்டது.

''பேசறது யாரு... வைதேகியா...?''

''ஆமா! நீங்க யாரு...?''

''உன்னோட பிரச்னையைத் தீர்க்கப் போகிறவன்...''

வைதேகி குழம்பிப் போய் நிற்க டெலிபோனில் பேச்சு தொடர்ந்தது. ''என்ன வைதேகி புரியலையா...? உன்னோட ரெண்டு லட்ச ரூபாய் கடனைப் பத்தி சொல்லிட்டிருக்கேன்.''

''நீ... நீங்க யாரு...?'' லேசாய் பதட்டப்பட்டாள்.

''டென்ஷன் வேண்டாம்... என்னை ஒரு ஃப்ரண்டா நினைச்சிட்டுப் பேசலாம். உன்னோட கடன் விஷயமெல்லாம் எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு நீ யோசிக்கலாம். அது ரொம்ப சிம்பிள். நீ என்னை நேர்ல சந்திக்கும்போது சொல்றேன். இப்ப விஷயத்துக்கு வர்றேன்... உனக்கு அந்த பேங்க் கடன் ரெண்டு லட்ச ரூபாய் பிரச்னை தீரணுமா வேண்டாமா...?''

''தீரணும்...''

''அப்படீன்னா, நீ என்னை சந்திக்கணும்...''

''நீங்க யார்ன்னு தெரியாமே நான் எப்படி...?''

''பயப்படாதே...! நீ எனக்குக் கூடப் பொறந்த சிஸ்டர் மாதிரி. நம்பி வரலாம்.''

''எங்கே வரணும்...?''

''லஸ் கார்னர்ல நர்மதா ரெஸ்டாரெண்ட் தெரியுமா...?''

''தெரியும்...''

''இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு அங்கே வந்துடு.''

''கூட யாரையாவது கூட்டிட்டு வரலாமா...?''

''கூடாது. கூட்டிட்டு வரக்கூடாதது மட்டுமில்லை. இந்த விஷயத்தை வெளியே யார்கிட்டேயும் சொல்லவும் கூடாது...

அப்படி சொல்லிட்டா உனக்கு என்னோட உதவி கிடைக்காது. நீ மட்டும் தனியாத்தான் வரணும்... இது ஒண்ணும் கட்டாயமில்லை. நீ இஷ்டப்பட்டா வரலாம். இல்லேன்னா ஆபீஸிலிருந்து நேரா வீட்டுக்குப் போயிடலாம். அதுக்கப்புறம் உன்னை நான் காண்டாக்ட் பண்ண மாட்டேன்.... இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு நீ நர்மதா ரெஸ்டாரெண்ட்ல இருக்கணும். பத்து நிமிஷம் லேட்டானாக் கூட என்னோட உதவி உனக்குக் கிடைக்காது."

"வ... வ... வர்றேன்..."

"மனசைப் போட்டுக் குழப்பிக்காமே சந்தோஷமா போய் வேலையைக் கவனி. சாயந்தரம் ஆறு மணிக்குப் பார்க்கலாம்."

ரிஸீவர் வைக்கப்பட்டு விட நெற்றி முழுவதும் வியர்வை வாங்கியிருந்த வைதேகி தன் கையிலிருந்த ரிஸீவரை நடுக்கமாய் சாத்திவிட்டு தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

மனசுக்குள் ரோடு ரோலர் உருள்கிற மாதிரியான இரைச்சல்.

'போனில் பேசிய அந்த ஆள் யார்...? அவர்க்கு எப்படி இந்த 'கடன்' விஷயம் தெரிந்தது...? ஆறு மணிக்குப் போகலாமா...? வேண்டாமா...?'

குழப்பமான யோசனைகளில் விநாடிகள் கரைந்து கொண்டிருந்தன. பென்சிலை சீவுகிற கத்தி மாதிரி ஒரு பயம் மனதை சீவிக் கொண்டிருந்தது.



## 5

ஜெயக்கொடி டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார்.

"சரண்! உனக்கும் வெண்ணிலாவுக்கும் பாஸ்போர்ட், விசா ரெடி பண்ணிட்டேன்..."



மறுமுனையில் சரண் சொன்னான்.

"தேங்க்யூ ஸார்..."

"ஃப்ளைட்ல டிக்கெட் கூட எடுத்தாச்சு..."

"எப்ப ஸார்...?"

"வர்ற சனிக்கிழமை ராத்திரி பதினோரு மணிக்கு ஃப்ளைட். ஃப்ளைட் நெம்பர் **A1 338.** பம்பாய் போய் போகணும்..."

ஜெயக்கொடி சொல்லிவிட்டு மெல்லிய குரலில் கேட்டார். "உங்களுக்கு அந்தத் தேதி வசதியானதுதானே...?"

"வசதியானதுதான் ஸார்..."

"ஏதாவது ப்ரச்னை இருந்தா சொல்லுங்க... டிக்கெட்டை மாத்திக்கலாம்..."

ஜெயக்கொடி கேட்க சரண் அவசரக் குரலில் குறுக்கிட்டான். "நோ ப்ராப்ளம் ஸார்... நீங்க எந்தத் தேதியில் எங்களை ஹாங்காங் புறப்பட்டுப் போகச் சொன்னாலும் போறோம். இந்த விஷயத்துல எங்களுக்கு உங்களோட மகிழ்ச்சிதான் முக்கியம்..."

"தட்ஸ் குட்...! சரி, நீங்க ரெண்டு பேரும் எப்போ ஃப்ரீயா இருப்பீங்க...?"

"இப்பக்கூட ஃப்ரீதான் ஸார்."

"வந்து என்னைப் பார்க்க முடியுமா?"

"இன்னும் அரைமணி நேரத்தில் உங்க முன்னாடி உட்கார்ந்துட்டிருப்போம் ஸார்..."

"வாங்க... வெயிட் பண்ணிட்டிருக்கேன்." பேசிவிட்டு ஜெயக்கொடி ரிஸீவரை வைக்க - மாடிப் படிகளில் இறங்கிய படியே வந்து கொண்டிருந்த அவருடைய மகள் நிஷா அவர்க்கு முன்பாய் கையைக் கட்டியபடி வந்து நின்றாள். இருபது வயது சித்தன்னவாசல் சிற்பம் மாதிரியான உடம்பு.

"என்ன அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸியாப்பா?"

"ஆமாம்மா."

"நீங்க பண்ணப் போறது தண்டச் செலவு."

"ஏம்மா அப்படிச் சொல்றே...! உனக்குக் கணவனா வரப் போகிற மாப்பிள்ளை எப்படிப்பட்டவர்ன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா? பணக்காரனாய் இருக்கலாம். குணம் கெடாம இருக்கானான்னு பார்க்கணும்."

நிஷா சிரித்தாள்.

"ஏம்மா! சிரிக்கிறே...?"

"நீங்க வேவு பார்க்கிற விஷயம் அந்த மாப்பிள்ளைக்குத் தெரிஞ்சுட்டா...?"

"தெரியாமே இருக்கணும்ங்கிறதுக்காகத்தானே டிடெக்டிவ் ஏஜென்ஸியைச் சேர்ந்தவங்களை அனுப்பி வைக்கப் போறேன்... இதோ பாரம்மா! நீ தாயில்லாத பொண்ணு. இந்த இருபது வருஷம் வரைக்கும் உன்னை என்னோட உள்ளங் கையில் வெச்சு பொத்திப் பொத்தி வளர்த்திருக்கேன். உனக்கு புருஷனா வரப் போறவனும் என்னை மாதிரியே பார்த்துக் கணுங்கிறதுக்காக இவ்வளவு கஷ்டப்படறேன். நாளைக்கு நீ கண்ணைக் கசக்கிக்கிட்டு வந்து நின்னா என்னால தாங்கிக்க முடியாதம்மா..."

"அய்யோ அப்பா..." நிஷா தன் அப்பாவின் இரண்டு கன்னங்களையும் பிடித்துத் திருகினாள்.

"அம்மா உயிரோடு இருந்திருந்தாக்கூட என்னை இப்படிப் பார்த்துக்க மாட்டா..."

ஜெயக்கொடி ஏதோ சொல்ல நினைத்தபோது போர்டி கோவுக்குள் சத்தமில்லாமல் அந்த ஃபோர்ட் கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நபரைப் பார்த்ததும் ஜெயக்



கொடி மலர்ந்து போய் எழுந்தார். "வாங்க ரெட்டியார் வாங்க... சிங்கப்பூரிலிருந்து எப்ப வந்தீங்க...?"

அந்த அறுபது வயது ரெட்டியார் பல்செட் சிரிப்போடு போர்டிகோ படியேறி வந்தார். "இன்னிக்குக் காலையில தான் வந்தேன். வந்ததுமே உங்க ஞாபகம்..."

"என்ன திடீர்னு...?"

"நம்ம பேனர்க்கு இது சில்வர் ஜூப்ளி இயர்...! உங்க டைரக்‌ஷன்ல ஒரு படம் பண்ணனும்னு ரெண்டு சன்னும் ஆசைப்பட்டாங்க. அதான் அதைப்பத்தி பேசிட்டுப் போலாம்னு வந்தேன்."

"ரொம்ப சந்தோஷம் ரெட்டியார்...! உங்க பேனர்ல நான் டைரக்ட் பண்ணி ரொம்ப வருஷமாச்சு. ஒரு நல்ல படமா பண்ணிடுவோம். உள்ளே வாங்க. பேசுவோம்..."

ரெட்டியாரைக் கூட்டிக்கொண்டு உள்ளே இருந்த தன்னுடைய பர்சனல் அறையை நோக்கிப் போன ஜெயக்கொடி மகளைப் பார்த்துச் சொன்னார்.

"நிஷா...! அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸியைச் சேர்ந்த பையனும் பொண்ணும் வந்தா இங்கேயே வெயிட் பண்ணச் சொல்லு."

தலையாட்டிவிட்டு நிஷா சோபாவில் சாய்ந்து கொண்டாள். டீபாயின் மேல் இருந்து ஒரு சினிமா மாத இதழைப் புரட்டி இருபது நிமிஷத்தைப் போக்கியிருந்தபோது ஹீரோ ஹோண்டா தடதடக்கிற சத்தம் போர்டிகோவில் கேட்டு தலை நிமிர்ந்தாள்.

ஹோண்டாவிலிருந்து சரணும், வெண்ணிலாவும் இறங்கிப் படியேறி வந்தார்கள்.

நிஷா புன்னகைத்தாள்.

''வாங்க...''

''டைரக்டர் ஜெயக்கொடியைப் பார்க்கணும்.''

''அவர் உள்ளே முக்கியமான விஷயமாப் பேசிட்டிருக்கார். அவர் என்னோட ஃபாதர்தான்...''

''வணக்கம் மேடம்...''

''உட்காருங்க...''

சரணும், வெண்ணிலாவும் உட்கார்ந்தார்கள்.

நிஷா அப்பா வருகிறாரா என்று திரும்பிப் பார்த்து விட்டு இருவரையும் ஏறிட்டாள்.

''ஹாங்காங் போறீங்க போலிருக்கு...''

''அது... வந்து... அப்பாதான்!'' சரண் குரலை இழுக்க, நிஷா பெரிதாய் புன்னகைத்தாள்.

''எல்லாம் எனக்குத் தெரியும். எனக்குப் பார்த்திருக்கிற மாப்பிள்ளை எப்படிப்பட்டவர்னு வேவு பார்க்கப் போறீங்க இல்லையா?''

''ஆ... ஆமா...''

''நீங்க வேவு பாருங்க... நான் வேண்டாம்னு சொல்லலை. ஆனா நீங்க ஹாங்காங் போய்ட்டு வந்து என்னோட அப்பா கிட்ட சொல்ல வேண்டிய பதில் என்ன தெரியுமா...?''

''எ... என்ன மேடம்...?''

''அந்த மாப்பிள்ளை சரியில்லை. சரியான குடிகாரன். பக்கா வுமனைஸர். ராத்திரி பூராவும் நைட் க்ளப்லேயே கிடக்கிறான்னு சொல்லணும். இப்படி நீங்க வந்து சொல்லிட்டா எங்கப்பா தர்ற ஃபீஸைக் காட்டிலும் நாலு மடங்கு நான் தர்றேன்...''



சரண் சில விநாடிகள் திகைத்துவிட்டுப் பின் மெல்லிய குரலில் சொன்னான். ''அதெப்படி மேடம் நாங்க பொய் சொல்ல முடியும்? அது எங்க தொழிலுக்கு விரோதமாச்சே...?''

''இந்தத் தொழில் தர்மம் எல்லாம் என்கிட்ட வேண்டாம். நான் என்ன சொன்னேனோ அதுதான் நீங்க ஹாங்காங் போய்ட்டு வந்து எங்கப்பாவுக்கு தர்ற ரிப்போர்ட்டா இருக்கணும்... ஏன்னா இதே மெட்ராஸ்ல நான் ஒருத்தரை லவ் பண்றேன். அவர் ஒரு டாக்ஸி டிரைவர். என்னோட இந்தக் காதலை ஜீரணம் பண்ணிக்க அப்பாவாலே முடியாது. கொஞ்சம் கால அவகாசம் வேணும். நீங்க ரெண்டு பேரும் ஹாங்காங்குக்குப் போங்க. ஜாலியா வாரம் பத்து நாள் தங்கி 'சைட் ஸீயிங்' போங்க. இஷ்டமானதை சாப்பிடுங்க. மாப்பிள்ளைப் பையனை வேவு பார்த்த மாதிரி பாவ்லா காட்டிட்டு ஊர் வந்து சேர்ந்து அப்பாகிட்ட நான் சொன்ன மாதிரி ரிப்போர்ட் குடுத்துடுங்க. ஓ.கே...''

நிஷா சொல்லிவிட்டு எழுந்து போய்விட -

சரணும், வெண்ணிலாவும் திகைத்துப் போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''வெண்ணிலா...''

''ம்...''

''இது என்ன புதுக் குழப்பம்...?''

''நாம எதிர்பார்க்காத ஒரு குழப்பம்.''

''என்ன செய்யலாம்?''

''ஒரு காதலை வாழ வைக்கலாம்.''

''நீ என்ன சொல்றே?''

''அப்பா சொன்னபடி ஹாங்காங் போய் வேவு வேலை பார்ப்போம். பட்... மகள் சொன்னபடி ரிப்போர்ட் குடுத்துடுவோம்.''

"இது எனக்கு சரியாகப் படலை..."

வெண்ணிலா புன்னகைத்தாள். "சரண்! இப்பவே நாம மாப்பிள்ளை பையனைப் பத்தி எந்த முடிவுக்கும் வந்துட முடியாது. ஹாங்காங் போய்ப் பார்ப்போம். உண்மையாகவே அவன் மோசமானவனாய் இருந்தா பிரச்சனையே இல்லை. ஒரே கல்லில் ரெண்டு மாங்காய்..."

"சரி! ஒருவேளை மாப்பிள்ளைப் பையன் புடம் போட்டு எடுத்த மாதிரி சொக்கத் தங்கமா இருந்தா...?"

"அப்படி இருப்பான்னு எனக்குத் தோணலை..."

"ஏன்?"

"ஒருத்தன் வெளிநாட்டுக்குப் போயிட்டான்னா அவன் நிச்சயமா ஒரு டீ டோட்லரா இருக்க முடியாது. விஸ்கி, பெண்கள், க்ளப்ன்னு நிச்சயமா இருப்பான்..."

"சரி. பேச்சை நிறுத்து...! ஜெயக்கொடி வந்துட்டிருக்கார்..."

சரண் கிசுகிசுக்க வெண்ணிலா மௌனமானாள்.



## 6

**வை**தேகி துணிந்து லஸ் கார்னர்க்கு போய் நர்மதா ரெஸ்டாரெண்டை கண்டுபிடித்து அதன் வாசலில் நின்ற போது சரியாய் ஆறு மணி.

ரெஸ்டாரெண்டில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை. ஏதோ நர்சரி கார்டன் மாதிரி இருக்க ரெஸ்டாரெண்ட்டுக்குள் சொற்ப அளவிலேயே ஆட்கள் தெரிந்தார்கள்.

வைதேகி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நின்றாள். டெலிபோனில் பேசியபடி உண்மையிலேயே அந்த நபர்



வருவாரா இல்லை யாராவது விளையாட்டுக்காக போன் செய்தார்களா?'

விநாடிகள் தெறித்துக் கொண்டிருக்க மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள் வைதேகி.

நேரம் 6.05.

'இப்படியே வெளியே நிற்கலாமா?'

'உள்ளே போய் உட்காரலாமா?'

'உள்ளே போய் உட்கார்வதுதான் சரி.'

வைதேகி ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்து - ஒரு மேஜையை ஆக்ரமித்து உட்கார்ந்தாள்.

பேரர் உடனே பக்கத்தில் வந்து நின்றார்.

"ஒரு பத்து நிமிஷம் போகட்டும் பேரர்."

பேரர் தலையாட்டிவிட்டு நகர வைதேகி காத்திருக்க ஆரம்பித்தாள்.

6.10.

6.15.

லேசாய் பொறுமை இழக்க ஆரம்பித்து எழுந்து போய் விடலாமா என்று யோசித்த விநாடி -

அவளுக்கு வலது பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"ஸாரி வைதேகி! கொஞ்சம் லேட்டாயிருச்சு."

திரும்பினாள் வைதேகி.

அந்த இளைஞன் நின்றிருந்தான்.

முப்பது வயது இருக்கலாம். வெள்ளை பேண்ட், கரு நீல சட்டை அணிந்து ஒரு கண்ணியமான தோற்றம் காட்டினான். தொடர்ந்து அவனே பேசினான். "வழியில ட்ராஃபிக் ஜாம்..."

ஏகப்பட்ட சிக்னல்கள் வேறு. ஸ்கூட்டரை விரட்டிகிட்டு வர்றதுக்குள்ளே பதினஞ்சு நிமிஷம் லேட்... எக்ஸ்ட்ரீம்லி வெரி வெரி ஸாரி..."

வைதேகி கேட்டாள்.

"காலையில போன் பண்ணினது நீங்கதானா...?"

"நானேதான்..." சொல்லிக் கொண்டே அவளுக்கு நேர் எதிரே இருந்த நாற்காலிக்குச் சாய்ந்தான்.

"போன்ல நீங்க சொன்னது சாத்தியம்தானா?"

"எது...?"

"என்னோட பேங்க் கடனைத் தீர்க்க ரெண்ட லட்ச ரூபாய் பணம் தரப்போறதா நீங்க சொன்னது...?"

"சாத்தியம்தான். பணம் இருக்கப்பட்டவங்களுக்கு எல்லாமே சாத்தியம்தான்."

பேரர் பக்கத்தில் வர - அவன் கேட்டான்.

"என்ன சாப்பிடறே வைதேகி?"

"எனக்கு காப்பி போதும்."

"ரெண்டு காபி..."

பேரர் நகர்ந்ததும் வைதேகி கேட்டாள். "என்னோட பேங்க் கடன் விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்...? உங்களுக்கு யார் சொன்னது...?"

"யாரும் சொல்லலை..."

"பின்னே...?"

"நீதான் சொன்னே...?"

"நானா...?"

"எஸ்...! இன்னிக்குக் காலையில் என்னோட ஸ்கூட்டர்க்கு உடம்பு சரியில்லை. வொர்க் ஷாப்ல விட்டுட்டு பஸ்



ஏறினேன். ஜன்னலோர சீட்ல வசதியா உட்கார்ந்துகிட்டேன். எனக்கு முன்சீட்ல நீயும், உன்னோட ஃப்ரண்டும் ரெண்டு லட்ச ரூபாய் கடனைப் பத்தி, ரொம்பவும் சீரியஸா பேசிட்டிருந்தீங்க... எல்லா வார்த்தையும் என் காதுல விழுந்தது. நீ வேலை பார்க்கிற ஆபீஸ் எதுன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக நீ இறங்கின அதே பஸ் ஸ்டாப்பில் நானும் இறங்கி ஃபாலோ பண்ணினேன். ஆபீஸ் எதுன்னு தெரிஞ்சுது. டெலிபோன் டைரக்டரியில் நம்பரைக் கண்டுபிடிச்சு உனக்கு போன் பண்ணினேன்."

வைதேகி சில விநாடிகள் மௌனித்து விட்டு பிறகு வாயைத் திறந்தாள்.

"உங்களைப் பத்தி நீங்க எதுவுமே சொல்லலையே?"

"இப்ப சொல்லிட்டாப் போகுது. என்னோட பேர் வந்தியத்தேவன். என்ன அப்படிப் பார்க்கறே... என்னடா இது சரித்திர காலப் பேர் மாதிரி இருக்குன்னு யோசனை பண்றியா...? என்னோட அப்பா சரித்திரக் கதைப் பிரியர். பொன்னியின் செல்வன் கதையில் வர்ற வந்தியத்தேவன் கேரக்டர் அவர்க்கு ரொம்பவும் பிடிக்கும். எனக்கு வெச்சிட்டார். என்னோட தங்கச்சிக்கு அவர் வெச்ச பேர் என்ன தெரியுமா...?"

"என்ன...?"

"குந்தவி..."

பேரர் காப்பிக் கோப்பைகளை வைத்து விட்டுப் போக வைதேகி கேட்டாள்.

"நீங்க என்ன வேலை பார்க்கறீங்க...?"

"ஒரு பைனான்ஸ் கம்பெனியில் ஃபீல்ட் ஆபீஸரா ஒர்க் பண்றேன். தங்கச்சிக்குக் கல்யாணம் பண்ணிட்டேன். அப்பா அம்மா உயிரோடு இல்லை. மந்தைவெளியில வீடு."

வைதேகி ஒரு வாய் காப்பியை அருந்தி விட்டுக் கேட்டாள். "நீங்க எனக்கு எந்த வகையில் ரெண்டு லட்ச ரூபாயைக் குடுத்து உதவி பண்ணப் போறீங்க...?"

''உனக்கு நான் உதவி பண்ணப் போறதில்லை.''

''பின்னே...?''

''எங்க பைனான்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர்.''

வைதேகி புருவங்களை உயர்த்தினாள்.

''கடனாவா?''

''கிடையாது.''

''பின்னே...?''

''அவர் பிரியப்பட்டு உனக்குத் தர்றார்...''

''யாரும் காரணம் இல்லாமே பணத்தை சும்மா தூக்கிக் கொடுத்துட மாட்டாங்க...''

''பரவாயில்லையே.. பாயிண்ட்டைப் பிடிச்சுகிட்டே.''

''ஒரு விஷயத்தை உங்களுக்கு முன்னாடியே தெரியப் படுத்திடறேன் வந்தியதேவன். நான் பணத்துக்காக பல்லி ளிக்கிற பெண்ணில்லை.''

''பைனான்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் யார்ன்னு தெரிஞ்சா நீ இப்படியெல்லாம் கவலைப்பட்டுக் கிட்டு இருக்க மாட்டே...!''

''யாருன்னு சொன்னாத்தானே தெரியும்?''

''தாரகேஸ்வரி...''

வைதேகி அயர்ந்தாள். ''உங்க மானேஜிங் டைரக்டர் ஒரு பொண்ணா...?''

''ஆமா... வயசு ஐம்பது. பழைய ஜமீன்தார் பரம்பரை. மன்னர் மான்யமெல்லாம் ஒழிச்ச பிறகு வருமானத்துக்காக ஒரு பைனான்ஸ் கம்பெனியை வெச்சு நடத்திகிட்டு வர்றாங்க...''

வைதேகி ஒரு நிம்மதிப் பெருமூச்சை விட்டபடி சொன்னாள். ''உங்க பைனான்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஒரு



பெண்ணா இருக்கிறதுனால நம்ம பேச்சு வார்த்தையை இனித் தொடரலாம். அந்த அம்மா என்னோட கடன் ரெண்டு லட்சத்தை செட்டில் பண்ணத் தயாராயிருக்காங்க இல்லையா?''

''ஆமா...''

''சரி! பதிலுக்கு அவங்க என்கிட்டயிருந்து என்ன எதிர் பார்க்கறாங்க...?''

''சொன்னா நீ நம்பமாட்டே...!''

''சொல்லுங்க...''

''நீ... அவங்களுக்காக...''

''அவங்களுக்காக...?''

''ஹாங்காங் போகணும்...''



## 7

அந்த வாரத்தில் ஒரு நாள்.

ஜெயக்கொடிக்கு முன்பாய் சரணும், வெண்ணிலாவும் உட்கார்ந்திருக்க அவர் பாஸ்போர்ட்களையும், விசா டிக் கெட்டையும் எடுத்து முன்னால் வைத்தார்.

''பாஸ்போர்ட், விசா ரெடி! இனிமே நீங்க நான் சொன்ன படி வர்ற சனிக்கிழமை ராத்திரி பதினோரு மணி ஃப்ளைட்ல ஹாங்காங் பறக்கலாம்...''

''ஸாரி! மாப்பிள்ளையைப் பத்தின தகவல்கள் ஏதும் இதுவரைக்கும் நீங்க சொல்லவேயில்லை.'' சரண் கேட்க ஜெயக் கொடி புன்னகைத்தார். ''இனிமேதான் சொல்லப் போறேன். டயரி வெச்சிருக்கியா...?''

''வெச்சிருக்கேன் ஸார்...''

''நோட் பண்ணிக்க...''

சரண் டயரியை பிரித்து வைத்துக் கொண்டு பால்பாயிண்ட் பேனாவை முனை தள்ளி தயாராய் வைத்துக் கொள்ள ஜெயக்கொடி தொடர்ந்தார்.

''மாப்பிள்ளைப் பையனோட பேர் ரூபன். படிப்பு பி.ஈ. கம்ப்யூட்டர் சயின்ஸ். எம்.பி.ஏ. அண்ட் எம்.சி.ஏ. 'ரிட்ஜ்' கம்ப்யூட்டர் கம்பெனியில் ப்ராஸஸிங் யூனிட்ல சீஃப் என்ஜினியர் போஸ்ட். கம்பெனியே குவார்ட்டர்ஸ் கொடுத்திருக்காங்க. ஹார்பர் வ்யூ ரோட்டில் பங்களா டைப் க்வார்ட்டர்ஸ் அது.''

''சரியான அட்ரஸ் சொல்ல முடியுமா ஸார்...?''

''நோட் பண்ணிக்குங்க... ரிட்ஜ் அவென்யூ. செக்டார் 545, பேச்லர்ஸ் க்வார்ட்டர்ஸ்...''

சரண் குறித்துக் கொண்டான்.

''இனி ஏதாவது டீடெய்ல்ஸ் வேணுமா...?''

''ஸார்! மிஸ்டர் ரூபன் மட்டும்தானே அந்த க்வார்ட்டர்ஸில் தங்கியிருக்கார்...?''

''ஆமா...'' தலையசைத்தவர் பக்கத்து அறையைப் பார்த்து குரல் கொடுத்தார். ''அம்மா... நிஷா! ஒரு நிமிஷம் - இப்படி வந்துட்டுப் போம்மா.''

நிஷா சல்வார் கம்மீஸில் ஒரு சந்தனச் சிலை மாதிரி அறையினின்றும் வெளிப்பட்டாள்.

''என்னப்பா...?''

''இதோ பாரம்மா... இவங்க மாப்பிள்ளைப் பையனைப் பத்தின விபரங்களைத் தெரிஞ்சுக்கிறதுக்காக வர்ற சனிக்கிழமை ராத்திரி ஹாங்காங் புறப்பட்டுப் போறாங்க. வாரம் பத்து நாள் அங்கே தங்கி மாப்பிள்ளை எப்படிப்பட்டவர்ன்னு



ஸ்டடி பண்ணி ரிப்போர்ட் கொண்டு வருவாங்க. அந்த ரிப்போர்ட் நல்லபடியா இருந்தா உனக்குக் கல்யாணம். ரிப்போர்ட் நெகட்டிவா இருந்தா வேற இடத்துல மாப்பிள்ளை பார்க்க வேண்டியதுதான்.''

''சரிப்பா...'' அப்பாவி போல் தலையாட்டிய நிஷா தன் அப்பாவுக்குத் தெரியாமல் சரணையும், வெண்ணிலாவையும் பார்த்துக் கண் சிமிட்டி உதட்டைக் கடித்தாள். பிறகு தன் அப்பாவிடம் புன்னகையோடு திரும்பினாள். ''அப்பா.''

''என்னம்மா...?''

''இவங்க கொண்ட வர்ற ரிப்போர்ட்படி மாப்பிள்ளை நல்லவராயிருந்தால் கல்யாணம் பண்ணி வைப்பீங்க இல்லையா?''

''ஆமா! அதுக்காகத்தானே இவ்வளவு செலவு பண்ணி இவங்களை அனுப்பிட்டிருக்கேன்... உனக்கு வரப் போகிற கணவன் ஒரு 'ஜெம்' மாதிரி இருக்கணும்...''

''இல்லேன்னா...?''

''கான்ஸல்தான்...!''

நிஷா சரணை ஏறிட்டாள். ''மிஸ்டர் சரண்! அப்பா சொன்னதைக் கேட்டுகிட்டீங்களா...? இது என்னோட வாழ்க்கைப் பிரச்னை. இந்த ஹாங்காங் ட்ரிப்பை விளையாட்டுத் தனமா எடுத்துக்காமே கொஞ்சம் சீரியஸாகவே கண்ணுல விளக்கெண்ணெய் விட்டுகிட்டு மாப்பிள்ளையை க்ளோஸா ஃபாலோ அப் பண்ணி ரிசல்ட்டைக் கொண்டு வாங்க... என்னோட வாழ்க்கையே இப்ப உங்க கையிலே தான் இருக்கு. டேக் கேர்...''

''எஸ்... மேடம்...''

சரணுக்கு சொல்லும்போதே தொண்டை அடைத்துக் கொண்டது.

# 8

**வை**தேகி தன் இரண்டு பெரிய கண்களிலும் அதிர்ச்சியை நிரப்பி வைத்துக் கொண்டு வந்தியத்தேவனை ஏறிட்டாள்.

''என்ன சொல்றீங்க...? நான் ஹாங்காங்க்கு போகணுமா?''

''ஆமா...''

''எதுக்கு...?''

''காரணத்தை நான் சொல்றதைக் காட்டிலும் மேடம் தாரகேஸ்வரி சொன்னாத்தான் சரியாயிருக்கும்.''

''ஸாரி...'' வைதேகி எழுந்தாள்.

''ஏன் எந்திரிச்சுட்டே...?''

''இது ஏதோ பெரிய இடத்து விவகாரம் மாதிரி தெரியுது. எனக்கு இந்த விவகாரம் வேண்டாம்...''

''இதுல விவகாரம் எதுவுமேயில்லை. ஹாங்காங் போய்ட்டு வர்றது ஒரு ஈஸி ஜாப். போயிட்டு ரெண்டே நாள்ல திரும்பிடலாம்.''

''காரணம் என்னன்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா...''

''ஓரளவுக்குத் தெரியும்...''

''அதைச் சொல்லுங்களேன்...''

''தாரகேஸ்வரியின் ஜமீன் பரம்பரைக்கு உரிமையான ஒரு பொருள் ஹாங்காங்கில் இருக்கு. அதைக் கொண்டு வந்து கொடுத்துட்டாப் போதும்...''

''அது என்ன பொருள்...?''



''ஹாங்காங் விழிகள்...''

வைதேகியின் கண்கள் திகைத்தன.

''ஹாங்காங் விழிகளா?''

''ஆமா...''

''அப்படின்னா...?''

''இதுக்கு மேலே நான் விளக்கமா சொல்ல மாட்டேன். சொல்லவும் கூடாது. உனக்கு மேற்கொண்டு விபரம் தெரியணும்ன்னா என்னோட மேடம் தாரகேஸ்வரியை வந்து பார்...''

''இது ஏதோ ஆபத்தான வேலையாயிருக்கும் போலிருக்கே!''

''விஷயம் என்னான்னு முழுசா தெரியாமலேயே இது ஆபத்தான வேலைன்னு எப்படி முடிவு கட்டறே...?''

''உங்க மேடத்தை எப்போ சந்திக்கலாம்...?''

''நீ பிரியப்பட்டா இன்னிக்கே... இப்பவே.''

''இன்னிக்கு வேண்டாம். இப்பவே லேட்டாயிருச்சு. வீட்ல எனக்காக அம்மாவும், சிஸ்டரும் காத்திட்டிருப்பாங்க...''

''அப்ப நாளைக்கு...?''

''வர்றேன்...''

''எத்தனை மணிக்கு...?''

''காலையில எட்டு மணிக்கு...''

''வா...''

''அட்ரஸ்...?''

வந்தியத்தேவன் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டினான்.

''மேடம் உனக்காக சரியா எட்டு மணிக்கெல்லாம் வந்து காத்திட்டிருப்பாங்க. நீ லேட் பண்ணாமே வந்துடு...''

வைதேகி தலையாட்டினாள்.

# 9

**ச**னிக்கிழமை இரவு பத்துமணி.

மீனம்பாக்கம் ஏர்போர்ட் லௌன்ஞ்சில் பாலிவினைல் நாற்காலிகளில் சாய்ந்திருந்தார்கள் சரணும், வெண்ணிலாவும். பம்பாய் புறப்பட்டுப் போகும் விமானம் ரன்வேயில் பசு மாடு மாதிரி காத்திருந்தது. கூட்டம் அதிகமில்லாமல் லௌன்ஞ்ச் வெறிச்சோடிப் போயிருக்க விசாரணைக் கௌண்டரில் மட்டும் ஒரு சின்ன கும்பல் தெரிந்தது.

''வெண்ணிலா...''

''ம்...''

''நமக்கு பணம் கொடுத்து ஹாங்காங் அனுப்பறது ஜெயக்கொடி. அவர்க்கு நாம துரோகம் பண்ணத்தான் வேணுமா...?''

''இது துரோகமில்லை சரண்...''

''பின்னே...?''

''நிஷாவுக்கு செய்யப் போற உதவி. ஒரு காதலைக் காப்பாத்தறது கடமையில்லையா...?''

''நிஷாவோட காதல் எனக்கென்னமோ நியாயமாய்ப் படலை...''

''ஏன்?''

''அவ காதலிக்கிறது யாரைத் தெரியுமா...?''

''தெரியும்! ஒரு டாக்ஸி ட்ரைவரை...''

''இது சரியா...?''



''காதல்ன்னா அப்படித்தான்...! பார்த்த ஃபர்ஸ்ட் சைட்லயே வர்றதுதான் காதல். அந்த சமயத்துல ஜாதி தெரியாது. மதம் தெரியாது. மொழி தெரியாது. அவன் பணக்காரனா... சோத்துக்கு லாட்டரி அடிக்கிறவனா, எதுவும் தெரியாது. நிஷா ஒரு டாக்ஸி ட்ரைவரைக் காதலிக்கிறதுல என்ன தப்பு...?''

''ஜெயக்கொடியோட ஸ்டேட்டஸுக்கு இந்தக் காதல் பொருந்தலையே...?''

''இதோ பாருங்க. சரண்! நீங்க இதுக்காக மனசைப் போட்டு அலட்டிக்காதீங்க. நாம ஹாங்காங் போறோம். மாப்பிள்ளை ரூபனை வாட்ச் பண்றோம். அவன் எப்படிப் பட்ட காரக்டர்ங்கிறதை நாம ஜட்ஜ் பண்ணிகிட்டு ஒரு முடிவுக்கு வருவோம்...''

ஏர்போர்ட் கூரையில் ஒளிந்து இருந்த ஸ்பீக்கர் அழகான ஆங்கிலத்தில் குரல் கொடுத்தது.

''ஃபர்ஸ்ட் கால் டு பாம்பே பாசஞ்சர்ஸ். ஃப்ளைட் நெம்பர் A 1... த்ரீ... த்ரீ... எய்ட்... கஸ்டம்ஸ் ஃபார்மாலிடீஸ் ஸ்டார்ட்டர்ட்.''

சரணும், வெண்ணிலாவும் எழுந்தார்கள். லௌன்ஞ்சின் மார்பிள் பரப்பில் இரண்டு நிமிஷ நடை போட்டு கஸ்டம்ஸ் கௌண்டரை நெருங்கினார்கள்.

தலை நரைத்த அந்த கஸ்டம்ஸ் அதிகாரி லக்கேஜ்களை மெட்டல் டிடெக்டரால் சோதித்துப் பார்த்துவிட்டு சரணை ஏறிட்டார்.

''பம்பாயிலிருந்து ஹாங்காங் பயணமா?''

''ஆமாம்...''

''எதற்காக ஹாங்காங் பயணம்...?''

''சைட் ஸீயிங்...''

''இது உங்கள் மனைவியா...?''

''இல்லை. என்னுடைய உதவியாளர். நான் ஒரு டிடெக்டிவ் ஏஜென்ஸியை நடத்தி வருகிறேன்.''

''ஹாங்காங்கில் எவ்வளவு நாள் ஸ்டே...?''

''பத்து நாள்...''

''பம்பாயிலிருந்து எந்த ஃப்ளைட் மூலமாக ஹாங்காங் போகிறீர்கள்...?''

''சி.எக்ஸ். 712 ஃப்ளைட்...''

அந்த கஸ்டம்ஸ் அதிகாரி எல்லாவற்றையும் சரி பார்த்த பின் கேட்டார்.

''முதல் தடவையாக ஹாங்காங் போகிறீர்கள் இல்லையா?''

''ஆமாம்...''

''ஹாங்காங்கில் இருக்கும்போது எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். ஏனென்றால் இப்போது அங்கே நிலைமை சரியில்லை...''

சரண் லேசாய் முகம் மாறினான்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''இத்தனை நாளும் பிரிட்டன் வசம் இருந்த ஹாங்காங் இப்போது சீனா வசம் போய்விட்டது. இது அங்குள்ள மக்களில் சில பேர்க்குப் பிடிக்காததால் திடீர் திடீர் என்று இனக்கலவரங்கள் ஏற்பட்டு ஏராளமாய் உயிர்ச் சேதங்கள்.''

சரண் கேட்டான்.

''பத்திரிகைகளில் அப்படி செய்தி ஏதும் இல்லையே?''

''பத்திரிகைகளில் செய்தி வராது. செய்தியை இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். இனக்கலவரம் நடக்கும்போது அதில் அதிகமாய் கொல்லப்படுவது சுற்றுலாப் பயணிகள்



தான்... எனவே சற்று ஜாக்கிரதையாக நீங்கள் ஹாங்காங்கில் இருக்க வேண்டும். இரவு நேரங்களில் வெளியே திரியக் கூடாது.''

கஸ்டம்ஸ் அதிகாரி சொல்லச் சொல்ல சரண், வெண்ணிலா இரண்டு பேர்களின் நரம்பு மண்டலங்களிலும் குளிர் ஓடியது.

## 10

காலை ஏழரை மணிக்கெல்லாம் ரெடியாகிவிட்ட வைதேகியை அம்மா ஞானமும், தங்கை சிந்துவும் வியப்பாய்ப் பார்த்தார்கள். ஞானம் கேட்டாள்.

''என்னடி... இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம் ஆபீஸுக்குக் கிளம்பிட்டே...?''

''ஆபீஸ் ரிக்கார்ட், செக்ஷன்ல ஒரு ஃபைலைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய வேலை என்னோடது. இப்பவே கிளம்பிப் போனா ஃப்ரீயா கொஞ்சம் தேடலாம்...''

''அதுக்காக ஏன் இப்படி வேர்த்து வழியறே...? மூஞ்சிக்கு பௌடர் பூசலையா...?''

''பூசியிருக்கேனே...!''

வைதேகி சாப்பாட்டு பேக்கை எடுத்துக் கொண்டாள். கண்ணாடி முன் நின்று தலையை ஒரு தடவை கோதிக் கொண்ட பின் வாசலுக்குப் போய் கால்களுக்கு ஸ்லிப்பரைக் கொடுத்தாள்.

''சாயந்தரம் சீக்கிரமா வந்துடுவியா...?''

''ம்... வந்துடுவேன்...''

கிளம்பிவிட்டாள் வைதேகி.

தெருக்கோடிக்கு வந்ததும் பஸ் உடனே கிடைத்தது.

வந்தியத்தேவன் நேற்றுக் கொடுத்த விசிட்டிங் கார்டில் இருந்த முகவரி ஏறக்குறைய மனப்பாடம் மாதிரி ஆகியிருக்க, அந்த இடத்துக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு உட்கார்ந்தாள்.

பஸ்ஸில் இருபது நிமிஷப் பயணத்துக்குப் பிறகு, பட்டினப்பாக்கம் ஸ்டாப்பிங்கில் இறங்கிக் கொண்ட வைதேகி ஆள் நடமாட்டம் இல்லாத அந்தச் சாலையில் வேக வேகமாய் நடந்து, எதிர்ப்பட்ட அவென்யூக்குள் நுழைந்தாள்.

ஏழாவது பங்களா.

பெரிய காம்பௌண்ட் கேட்டுக்கு முன்னால் புஷ்டியான மீசையோடு தெரிந்த வாட்ச்மேன் வைதேகியைப் பார்த்ததும் பவ்யமான குரலில்கேட்டான், "அம்மா...! உங்க பேரு வைதேகியா...?"

"ஆமா..."

கும்பிட்டுக் கதவைத் திறந்துவிட்டான்.

"உள்ளே போங்கம்மா..."

போனாள்.

பங்களாவின் பிரம்மாண்டம் வைதேகியின் கண்களுக்கு ஒரு 70 எம்.எம்.ஸீன் மாதிரி விரிந்தது.

ஹாக்கி மைதானம் மாதிரி ஒரு பெரிய புல்வெளி.

போர்டிகோவில் நான்கைந்து வெளிநாடுகளில் பிறந்த கார்கள். போர்டிகோவை நோக்கிப் போகும் சிறிய பேவ்மெண்டின் இரண்டு பக்கமும் பித்தளை உடம்போடு ரோஜாத் தொட்டிகள்.

வைதேகி மனசுக்குள் பிரமிப்பைக் கொண்டாடிக் கொண்டே நடந்தாள்.



'இவர்களுக்கெல்லாம் லட்ச ரூபாய் என்பது ஒரு ரூபாய் நாணயம் மாதிரி!'

பாதி வழி நடக்கும்போதே, வந்தியத்தேவன் எதிர்ப்பட்டான். உதட்டில் புன்னகை.

"நீ என்னை ஏமாத்திட்டே வைதேகி...!"

"என்ன சொல்றீங்க...?"

"சொன்னபடி எட்டுமணிக்கு நீ வரமாட்டேன்னு நினைச்சேன்."

"நான் ஒரு தடவை சரின்னு சொல்லி தலையாட்டிட்டா அதிலிருந்து பின் வாங்க மாட்டேன்."

"குட் பாலிஸி...! வா போகலாம்."

போர்டிகோவுக்கு இடதுகைப் பக்கமாய் கூட்டிக் கொண்டு போனான்.

வைதேகி பின் தொடர்ந்தாள்.

ஹால், சுவர், தரை எல்லாமே க்ரானைட் இழைக்கப் பட்டு வைதேகியைப் பிரதி எடுத்துக் காண்பித்தது.

"இது வீடா... அரண்மனையா...?"

ரோஸ்வுட் கைப்பிடி மின்னிய மாடிப்படிகளில் வைதேகியைக் கூட்டிக் கொண்டு போன வந்தியத்தேவன் வராந்தாவில் முதன் முதலாய் எதிர்ப்பட்ட ஒரு அறைக்கு முன்பாய் கொண்டு வந்து நிறுத்தினான்.

"இதுதான் மேடத்தோட ரூம்..."

சொல்லிவிட்டு கதவை மெல்லத் தட்ட உள்ளேயிருந்து "எஸ்" என்ற குரல் வந்தது.

டோர் க்ளோஷரை எதிர்த்துத் தள்ளிக் கொண்டு வந்தியத்தேவன் உள்ளே போக வைதேகி தயக்கமாய் தொடர்ந்தாள்.

இருபதுக்கு இருபது என்ற அளவிலான அந்தப் பெரிய அறையின் மையத்தில் ரோஜா வண்ண நிறத்தில் சோபா ஒன்று தெரிய அதில் அறுபது வயதுப் பெண்மணி ஒருத்தி புதையப் புதைய உட்கார்ந்திருந்தாள்.

உடம்பு சற்றே தளர்ந்து போயிருந்தாலும் ஆரோக்யமான முகம். மூக்கிலும், காதுகளிலும் சின்னச் சின்ன வைரத் துணுக்குகள் மின்னின. நரை முடியை நேர்த்தியாக, வாரி சின்னதாய் ஒரு கொண்டை போட்டிருந்தாள். வெள்ளை நிற பட்டுச் சேலையில் ஜமீன் பரம்பரையின் கம்பீரம் தெரிந்தது.

''வணக்கம்மா...''

வைதேகி கைகளைக் குவிக்க, தாரகேஸ்வரி அம்மாள் வசீகரமாய், புன்னகைத்து எத்தனையோ நாள் பழகிய தினுசில், ''வாம்மா வைதேகி'' என்றாள். தனக்கு முன்னால் இருந்த நாற்காலியைக் காட்டினாள்.

''உட்கார்ம்மா...''

உட்கார்ந்தாள்.

''வந்தியத்தேவா...! நீயும் உட்காரப்பா...''

அவனும் உட்கார்ந்தான்.

சில விநாடி மௌனத்துக்குப் பின் தாரகேஸ்வரி தொடர்ந்தாள். ''வைதேகி! உன்னைப் பத்தின எல்லா விபரங்களையும் வந்தியத்தேவன் என்கிட்ட சொன்னான். உன்னை மாதிரியான ஒரு குடும்பப் பெண்ணைத்தான் கடந்த ரெண்டு மாச காலமா நாங்க தேடிட்டு இருந்தோம். நாங்க தேடிட்டிருந்த எதிர்பார்ப்புக்கு குறைவில்லாம நீ கிடைச்சிருக்கே. நீ எனக்காக ஒரு ரெண்டு நாள் ஹாங்காங் போய்ட்டு வரணும்.''

''எதுக்காகன்னு எனக்கு இன்னும் தெரியலையே! அவர் ஏதோ 'ஹாங்காங் விழிகள்'ன்னு சொன்னார். அது பத்தின விபரம் எனக்குத் தெரிஞ்சாத்தானே... நான் என்னோட பதிலைச் சொல்ல முடியும்.''



தாரகேஸ்வரி வந்தியத்தேவனை ஒரு பார்வை பார்க்க, அவன் எழுந்து போய் பக்கத்தில் இருந்த பீரோவைத் திறந்து ஒரு ஆல்பத்தைக் கொண்டு வந்தான்.

வெல்வெட் துணி வேயப்பட்ட ஆல்பம் அது.

தாரகேஸ்வரி அந்த ஆல்பத்தை வாங்கிப் பிரித்து நடுப் பக்கத்தில் இருந்த ஒரு போட்டோவைக் காட்டினாள்.

''வைதேகி! இந்த போட்டோவைப் பாரு.''

பார்த்தாள்.

அது ஒரு பெண் கடவுளின் சிலை.

நின்ற நிலையில் கையில் சூலாயுதம்.

தாரகேஸ்வரி தொடர்ந்தாள், ''இது எங்கள் ஜமீன் பரம்பரைக்குக் காவல் தெய்வமா இருக்கிற குலதெய்வத் தோட சிலை. கோயில் ஒரு கிராமத்துல இருக்கு. வைதேகி! இந்த போட்டோவில் இருக்கிற சிலையோட கண்களைக் கொஞ்சம் உத்துப் பாரு...''

வைதேகி உற்றுப் பார்த்தாள்.

''என்ன தெரியுது...?''

''கண்ணு ரெண்டும் பளிச்ன்னு இருக்கிற மாதிரித் தெரியுது.''

''அதுக்குக் காரணம் சாமி சிலையோட கண்ணின் பாவைகளாய் ரெண்டு விலை உயர்ந்த வைரக் கற்கள் பதிக்கப்பட்டிருக்கிறதுதான். சாமி சிலையை இந்த போட்டோவில் பார்க்கிறதைக் காட்டிலும் நேரில் பார்க்கும்போது இன்னும் அற்புதமாயிருக்கும். ஆனா நேரில் பார்க்கக்கூடிய அந்த பாக்கியம் பறி போய் இப்போ பத்து வருஷமாச்சு...''

''ஏன்...?''

''சாமி சிலையின் கண்களில் இருந்த அந்த ரெண்டு வைரக் கற்களையும் யாரோ திருடி வெளிநாட்டு ஆசாமிகளுக்கு

வித்துட்டாங்க. அந்த வைரங்கள் ரெண்டும் இப்போ ஹாங் காங்கில் இருக்கிறதா அதிகாரபூர்வமாத் தெரிய வந்திருக்கு...''

''ஹாங்காங்ல யார்கிட்டே...?''

''அது ஒரு நபர் நடத்திட்டு வர்ற தனியார் மியூஸியத்துல ஒரு பெண் சிலையோட, கண்கள்ல பொருத்தப்பட்டிருக்கு.''

வைதேகி குழப்பமானாள்.

''நான் ஹாங்காங்குக்குப் போய் அந்த வைரக் கண்களைக் கொண்டு வரணுமா மேடம்...?''

''ஆமா...''

''அது எப்படி மேடம் முடியும்...? ஒரு மியூஸியத்தில் இருக்கிற சிலையின் கண்கள்ல பொருத்தியிருக்கிற வைரக் கற்களை ஒரு சாதாரணப் பெண்ணான என்னால எப்படிக் கொண்டுட்டு வர முடியும்...?''

''பொறு வைதேகி! அவசரப்படாதே...! நான் இன்னும் சொல்ல வேண்டிய முக்கியமான விஷயத்துக்கே வரலை. அந்த வைரக் கற்கள் இப்போ மியூஸியத்துல கிடையாது. உண்மை வைரக் கற்களுக்குப் பதிலா போலியான வைரக் கற்களை சிலையோட கண்கள்ல பதிச்சுட்டு உண்மையான வைரக் கற்களோடு ஹாங்காங்ல ஒருத்தர் நமக்காகக் காத்திட்டிருக் கார். அவர் ஒரு இந்தியர். அதே மியூஸியத்தில் சூபர்வைஸ ராக வேலை பார்க்கிறார். வைரங்களோட பின்னணியைத் தெரிஞ்சுகிட்ட அவர் 'என்னை இந்தியாவுக்கு வந்தபோது ஒரு தடவை காண்டாக்ட் பண்ணினார். உங்க குலதெய்வத் தோட கண்களில் இருக்க வேண்டிய வைரக் கற்கள் இப்போ என்கிட்ட இருக்கு. அதை நான் பத்திரமா வெச்சிருக்கேன். ஹாங்காங்கிலிருந்து அதை இந்தியாவுக்கு கொண்டு வர்றது ரொம்பவும் கஷ்டம். காரணம் ஹாங்காங் ஏர்போர்ட்டில் கெடுபிடிகள் எக்கச்சக்கம். மாட்டினா எனக்கு மரண தண்டனை



தான். ஸோ ரிஸ்க் எடுக்க விரும்பலை. உங்களுக்கு அந்த வைரக் கற்கள் தேவைன்னு நினைச்சா... யாரையாவது ஒருத்தரை உங்க பொறுப்புல அனுப்புங்க. நான் கொடுத்து விடறேன்னு சொன்னார்...''

31520

வைதேகி குறுக்கிட்டாள்.

''நீங்க இங்கிருந்து அனுப்பற நபரை ஹாங்காங் ஏர்போர்ட் கஸ்டம்ஸ் அதிகாரிகள் பிடிக்க மாட்டாங்களா என்ன?''

தேதி : ..................... ஊர் - 607 001

''அதுக்கும் அவர் ஒரு வழியை சொல்லிட்டுப் போயிருக் கார்...''

O31,3N8,HP
1370011

''என்ன வழி...?''

''நீங்க இந்தியாவிலிருந்து அனுப்பற நபர் ஒரு பெண் ணாயிருக்கணும். அந்தப் பெண் இந்தியாவிலிருந்து புறப் படும்போதே காதுல ஸ்டட்ஸ் போட்டுக்கணும். அந்த ஸ்டட்ஸ் ரெண்டும் 'கண் ஷேப்'பில் இருக்கணும். 'கண் ஷேப்'பில் இருக்கும் ஸ்டட் மையத்துல ரெண்டு போலி வைரக் கற்களைப் பொருத்த வேண்டியது ரொம்ப ரொம்ப முக்கியம்...''

வைதேகிக்கு இப்போது லேசாய் ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. தாரகேஸ்வரி தொடர்ந்தாள்.

''கண் ஷேப்பில் இருக்கிற போலி வைரம் பதிச்ச ஸ்டட்ஸ் களை காதுல மாட்டிகிட்டு ஒரு பெண் இந்தியாவிலிருந்து ஹாங்காங் புறப்பட்டுப் போக வேண்டியது. இந்தியாவி லிருந்து புறப்படும் ஏர்போர்ட்டிலும் சரி, ஹாங்காங் போய் சேர்ந்ததும் அந்த ஏர்போர்ட்டிலும் சரி... அந்தப் பெண் என்னென்ன நகைகளைப் போட்டிருந்தாள்னு கணக்கு எடுத்து ஒரு லிஸ்ட்டை வெச்சுக்குவாங்க. அந்தப் பெண் ஹாங்காங்கிலிருந்து திரும்பி இந்தியாவுக்கு வரும்போது

அந்த நகைகள் லிஸ்ட்டை சரி பார்த்துக்குவாங்க. எக்ஸ்ட் ராவா ஏதாவது நகை இருந்தா அதைப் பத்தி என்கொயர் பண்றது வழக்கம். இப்போ நாம அனுப்பப் போற பெண் ஹாங்காங் போகும்போது ஸ்டட்ஸோடு போவா. வரும் போதும் ஸ்டட்ஸோடு வருவா. ஆனா பெண் ஹாங்காங் போய்ச் சேர்ந்ததும் ஸ்டட்ஸில் இருக்கிற போலி வைரங் களை ரிமூவ் பண்ணிட்டு மியூஸியத்திலிருந்து எடுத்த சாமி சிலையின் ஒரிஜினல் வைரங்களை ஹாங்காங்கில் இருக்கிற அந்த இந்தியர் பதிச்சு அனுப்பிடுவார். ஸ்டட்ஸை மறுபடியும் காதுல மாட்டிகிட்டு இந்தியாவுக்குத் திரும்பிட வேண்டியது தான்... ஒரு ஆண் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. ஒரு பெண் வேணும். அதிலும் நம்பிக்கையான ஒரு பெண் வேணும். அப்பேர்ப்பட்ட ஒரு நம்பிக்கையான பெண்ணைத் தான் கடந்த ரெண்டு மாச காலமா தேடிட்டிருந்தோம். மன சாட்சிக்குப் பயப்படற, பிறர் சொத்துக்கு ஆசைப்படாத ஒரு குடும்பப் பொண்ணாயிருக்கணும்ன்னு ஆசைப்பட்டேன். நான் ஆசைப்பட்ட மாதிரியே நீ கிடைச்சிருக்கே."

தாரகேஸ்வரி பேசி முடித்திருக்க, வைதேகி மௌனமாய் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

வந்தியத்தேவன் கேட்டான்.

"என்ன வைதேகி...! பேச்சையே காணோம்."

அவள் நிமிர்ந்தாள். "எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. மேடம் சொல்றதைக் கேட்கும்போது அந்த வைரங்களைக் கொண்டு வர்ற வேலை ஈஸியா இருக்கிற மாதிரியும் இருக்கு. கஷ்டமாவும் தெரியுது..."

தாரகேஸ்வரி புன்னகைத்தாள். "இந்தக் காரியத்துல எந்தக் கஷ்டமும் இல்லை. ஹாங்காங்குக்கு நீ மட்டும் போகப் போறதில்லை உன் கூட வந்தியத் தேவனும் வர்றான். இந்தக் காரியம் முடியுற வரைக்கும் அவன் உனக்கு அண்ணன். நீ



அவனோட கஸின் சிஸ்டர். ரெண்டு பேரும் ஒண்ணா ஹாங் காங் போறீங்க. ஹாங்காங் ஏர்போர்ட்ல என்ன காரணத் துக்காக இங்கே வந்தீங்கன்னு கேட்பாங்க... அப்ப சொல்ல வேண்டிய காரணம் இதுதான். உடம்பு சரியில்லாத ரிலேடிவ் ஒருத்தரைப் பார்க்க வந்ததாகச் சொல்லணும். போன அன்னிக்கே காரியத்தை முடிச்சுகிட்டு மறுநாள் ஃப்ளைட்ல கிளம்பி வந்துட வேண்டியதுதான். இந்த வேலையை மட்டும் முடிச்சுட்டா உனக்கு நான் தரப் போற சம்பளம் அஞ்சு லட்ச ரூபாய். அதைத் தவிர நீ பிரியப்பட்டது எது கேட்டாலும் வாங்கித் தர்றேன்..."

வந்தியத் தேவன் குறுக்கிட்டான்.

"பயப்படாதே வைதேகி! இங்கேயிருந்து புறப்படற நிமி ஷத்திலிருந்து ஹாங்காங் போய்ச் சேர்ந்து, அங்கேயிருந்து புறப்பட்டு இந்தியா வந்து சேர்ற வரைக்கும் ஒரு நிமிஷம் கூட உன்னை விட்டுப் பிரியாமே கூடவே இருப்பேன்... காதுல ஸ்டட்ஸை மாட்டிக்கிற வேலை மட்டும் தான் உனக்கு..."

"ஏர்போர்ட்ல ஸ்டட்ஸை சோதனை போட மாட்டாங் களா...?"

"சோதனையெல்லாம் போட மாட்டாங்க. அவங்க கணக்குப்படி ரெண்டு ஸ்டட்ஸ் காதுல இருக்கணும். அவ் வளவுதான். அப்படியே சோதனை போட்டாலும் ஸ்டட்ஸ்ல இருக்கிறது போலி வைரமா உண்மையான வைரமான்னு அவங்களாலே கண்டு பிடிக்க முடியாது."

"ஹாங்காங் போய்ட்டு ரெண்டே நாள்ல திரும்பி வந்துட முடியுமா...?"

"கண்டிப்பா..."

"எனக்கு யோசிக்க ரெண்டு நாள் அவகாசம் வேணும்."

"தாராளமா...! ரெண்டு நாள் என்ன? ஒரு வாரம் கூட எடுத்துக்கோ. ஆனா உன்னோட பதில் எனக்கு சாதகமா

யிருக்கணும். எங்க ஜமீன் பரம்பரைக்கு சொந்தமான, குல தெய்வத்தோட கண்களில் இருந்த வைரங்களை மீட்டுத் தரப் போற பெருமை உனக்குக் கிடைக்கட்டும்.''

வைதேகி எழுந்தாள்.

''நான் வர்றேன் மேடம்...''

''உன்னோட பதிலை எப்பச் சொல்றே...?''

''நாளைக்கு சாயந்தரத்துக்குள்ளே...''

''உன்னோட பதிலைத் தெரிஞ்சுகிட்டுதான் பாஸ்போர்ட்டுக்கெல்லாம் ஏற்பாடு பண்ணணும்...''

வைதேகி கைகளைக் குவித்துவிட்டு நடந்தாள்.

## 11

**ஹா**ங்காங்-நாக் இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டை சி.எக்ஸ். 712 விமானம் தொட்டபோது மேகமூட்டமான மத்தியான நேரம். கடல் காற்று சிலுசிலுத்துக் கொண்டிருந்தது.

சரணும், வெண்ணிலாவும் விமானத்திலிருந்து இறங்கி கஸ்டம்ஸ் இமிக்ரேஷன் சமாச்சாரங்களைப் பொறுப்பாய் முடித்துக் கொண்டு, லக்கேஜ்களை சேகரித்துக் கொண்டு லௌன்ஞ்சில் நடந்தார்கள்.

பார்க்கிற எல்லா முகங்களிலுமே சீன, ஜப்பான் சாயல்கள். ஏர்போர்ட் கலர்ஃபுல்லாய் ஏதோ பிரம்மாண்டமான ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் மாதிரி இருந்தது. ஒரு பெரிய சைன் போர்டில் கம்ப்யூட்டரின் கை வண்ணத்தில் விளம்பர வாசகங்கள் சீன மொழியிலும், அதற்கு கீழே சின்னதாய் ஆங்கில மொழியிலும் ஓடிக் கொண்டிருந்தன.



வெண்ணிலா கூப்பிட்டாள்.

''சரண்.''

''ம்...''

''நாம தங்கப்போற ஹோட்டல் பேர் என்ன?''

''ஹோட்டல் ப்யூஜிதா.''

''ஏர்போர்ட்டிலிருந்து எவ்வளவு தூரம்?''

''இருபத்தஞ்சு கிலோ மீட்டர்...''

''டாலரைப் பார்த்துச் செலவு பண்ணணும். இல்லேன்னா கையைக் கடிக்கும்...''

ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார்கள். மழை லேசாய்த் தூற ஆரம்பித்திருந்தது. டாக்ஸிகள் அணிவகுத்துத் தெரிய -

ஆங்கிலம் தெரிந்த ஒரு டாக்ஸி ட்ரைவரைப் பிடித்து பேரம் பேசி உட்கார்ந்தார்கள்.

டாக்ஸி இறக்கைக் கட்டிக் கொள்ளாத குறையாகப் பறந்தது. ஏதோ ரப்பரில் போட்ட ரோட்டில் செல்வது போல் கார் ஒரு சின்னக் குலுக்கல்கூட இல்லாமல் போயிற்று.

சரண் காரின் ஸ்பீடாமீட்டரை மெல்ல எட்டிப் பார்த்தான். சிவப்பு முள் 120 கி.மீ.ல் தத்தளித்துக் கொண்டிருந்தது. ரோட்டின் இரண்டு பக்கமும் பராமரிக்கப்பட்டிருந்த மரங்கள் கார் போகிற வேகத்தில் வெறும் பச்சைத் தீற்றலாய் தெரிந்தன.

வெண்ணிலா கேட்டாள். ''ஹோட்டலுக்குப் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்ததும் நம்முடைய முதல் கட்ட வேலை என்ன சரண்?''

சரண் தன் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்தான். நேரம் 2.57.

''நாம ஹோட்டலை விட்டு ஐந்து மணிக்கு கிளம்பி முதல்ல ரூபனோட வீட்டைக் கண்டு பிடிப்போம். வீட்டைக் கண்டு பிடிச்ச பிறகு ரூபனோட ஆக்டிவிட்டீஸை அப்சர்வ் பண்ணுவோம். அவன் வீட்டிலிருந்து வெளியே கிளம்பிட்டா ஃபாலோ பண்ணுவோம்...''

''ஜெயக்கொடி எத்தனை மணிக்கு போன் பண்ணச் சொன்னார்?''

''தினசரி ஹாங்காங் நேரம் பத்து மணிக்கு...''

''நிஷாவோட காதலை நினைச்சாத்தான் எனக்கு பயமாயிருக்கு...! டைரக்டர் ஜெயக்கொடிக்கு அது பெரிய ஷாக்கிங் நியூஸ்தான் இல்லையா...?''

''கண்டிப்பா...! சினிமாவில் ஏழையோட காதலை சப்போர்ட் பண்ணிப் பேசற அவர், மகளோட காதலுக்கு என்ன ரியாக்ஷன் தர்றார்ன்னு பார்க்கலாம்...''

சரண் - வெண்ணிலாவுக்கு இடையே நடந்த இந்த சம்பாஷணை முடிவதற்குள் ஹோட்டல் 'ப்யூஜிதா' ஐம்பத்தொன்பது மாடிகளோடு வந்தது. சமுத்திரத்தைப் பார்த்தபடி முகப்பு திரும்பியிருந்தது. கட்டிடத்தின் நெற்றியில் 'ப்யூஜிதா' என்று பொறித்த எழுத்துக்கள் முறையே சீனா, ஜப்பான், ஆங்கில மொழிகளைப் பேசியது.

டாக்ஸி ஹோட்டலின் காம்பௌண்டு கேட்டுக்குள் நுழைந்து கான்க்ரீட் பாதையில் ஓடி பிரம்மாண்டமான போர்டிகோவுக்குள் போய் நுழைந்தது.

இறங்கிக் கொண்டு டாக்ஸிக்கு பணம் கொடுத்து அனுப்பி விட்டு ரிசப்ஷன் கௌண்டர்க்குப் போனார்கள்.

வெள்ளை பீங்கானில் செய்த மாதிரி இருந்த அந்த ரிசப்ஷனிஸ்ட் பெண் தன் அதி சுத்தமான பற்களைக் காட்டிச் சிரித்தாள்.



''எஸ்...''

சரண் ஆங்கிலத்தில் சொன்னான். "நாங்கள் இந்தியாவிலிருந்து வருகிறோம். என் பெயர் சரண். இவள் வெண்ணிலா. இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையிலிருந்து ஒரு சூட் ரிசர்வ் பண்ணச் சொல்லி உங்கள் ஹோட்டலுக்கு கேபிள் ஒன்று கொடுத்திருந்தோம்...''

அவள் குறுக்கிட்டாள்.

''ஒரு நிமிஷம்...! பெயர் என்ன சொன்னீர்கள்?''

''சரண், வெண்ணிலா..?''

''எஸ்...''

''ப்ரம் இண்டியா...?''

''எஸ்...''

அவள் தனக்கு எதிரே இருந்த கம்ப்யூட்டரின் பட்டனைத் தட்டி விபரம் கேட்டாள். அது தகவல்கள் உண்மை தான் என்று சொல்லி ஐந்தாவது மாடி சூட் நெம்பர் 509 என்று மின்னி மின்னிக் காட்டியது.

''எவ்வளவு நாட்கள் தங்கப் போகிறீர்கள்?''

''ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள்...''

ஒரு பேரர் அழைக்கப்பட்டான். ரூம் சாவியோடு லக்கேஜ்களை அவன் எடுத்துக்கொள்ள, வெண்ணிலாவும், சரணும் அவனைத் தொடர்ந்து லிப்டில் பயணமானார்கள்.

ஐந்தாவது மாடி வந்தது.

சுவர், தரை எல்லாமே கிரானைட். சுவரின் கண்ணாடி சதுர ஜன்னல்களுக்குக் கீழே ஹாங்காங் பல மாடிக் கட்டிடங்களோடு ஏதோ ஒரு மாயாபுரி போல் தெரிந்தது.

509 சூட் அமர்க்களமாய் ஒரு சினிமா செட்டிங்கைப் போல் தோற்றம் காட்ட சரணும், வெண்ணிலாவும் இமைக்க மறந்தார்கள்.

''வெண்ணிலா...''

''இதுக்கெல்லாம் ஒரு மச்சம் வேணும். நீயும் நானும் ஆயுசில ஹாங்காங் பத்தி நினைச்சுப் பார்த்திருப்போமா...?''

''என்னோட ஜாதகத்துல வெளிநாட்டு யோகம் இருக்கிறதாக எங்கப்பா அடிக்கடி சொல்லியிருக்கார்.''

பேரர் வெளியேறிப் போய்விட சரண் மெதுவாய் நடந்து போய் வலது பக்க சுவரை அடைத்த மாதிரி இருந்த திரைச் சீலையை விலக்கினான்.

கண்ணாடி தடுப்புக்கு அப்பால் கடல் வெள்ளை நுரை அலைகளோடு அழகாய் அசைந்தது.

''ப்யூட்டிஃபுல்...''

''ஒரு சேரைப் போட்டு உட்கார்ந்துட்டு பார்த்துட்டே இருக்கலாம் போலிருக்கு...''

''சரண்...''

''ம்...''

''இப்ப எனக்கு சூடா ஒரு காபி வேணும்...''

''காபிதானே! இண்டர்காம் ரிஸீவரை எடுத்து நீயே ஆர்டர் பண்ணிடு.''

வெண்ணிலா இண்டர்காமை நோக்கிப் போன விநாடி கட்டிலின் தலைமாட்டில் இருந்த டெலிபோன் கூப்பிட்டது.

போய் ரிஸீவரை எடுத்தாள்.

ரிசப்ஷனிஸ்ட் பேசினாள்.

''உங்களுக்கு வெளியே இருந்து ஒரு போன்கால். இணைப்பு தரட்டுமா...?''



''கொடுங்கள்...''

இணைப்பு கிடைத்தது.

''ஹலோ...'' வெண்ணிலா குரல் கொடுக்க, மறுமுனையில் ஒரு ஆண் குரல் கேட்டது. தமிழ்.

''யாரு வெண்ணிலாவா...?''

''ஆமா...''

குரல் சிரித்தது.

''ஹாங்காங்கிற்கு வருகை தந்திருக்கும் உனக்கும், சரணுக்கும் என்னோட நல்வாழ்த்துக்கள்...''

''நீங்க யாரு...?''

''ரூபன்...''

## 12

**தா**ரகேஸ்வரிக்கு முன்பாய் நின்றிருந்தாள் வைதேகி.

''மேடம்! நான் ஹாங்காங் போக சம்மதிக்கிறேன்...''

''ரொம்ப சந்தோஷம்...! இப்படியொரு நல்ல முடிவுக்குத்தான் நீ வருவேன்னு எனக்குத் தெரியும். புத்திசாலித்தனமான முடிவு. ரெண்டே நாளில் பாஸ்போஸ்ட் வாங்கிடலாம். எல்லாத்தையும் வந்தியத்தேவன் பார்த்துக்குவான். இன்னியிலிருந்து மூணாவது நாள் நீ ஹாங்காங் புறப்படலாம்.''

''மேடம்...''

''என்ன...?''

''நான் ஹாங்காங் போறதைப் பத்தி வீட்ல சொல்லலை. கொச்சியில் ஆபீஸ் கொலீக் ஒருத்திக்குக் கல்யாணம் கல்

யாணத்துக்குப் போய்ட்டுத் திரும்ப நாலைஞ்சு நாளாகும்ன்னு சொல்லியிருக்கேன்.''

தாரகேஸ்வரி சிரித்தாள்.

''சரியான காரணத்தைத்தான் சொல்லியிருக்கே. யார்க்கும் எந்த சந்தேகமும் வராது. ஆபீஸ்ல என்ன காரணம் சொல்லி லீவு போட்டிருக்கே?''

''வீட்ல அம்மாவுக்கு ரொம்பவும் உடம்பு முடியலை. பக்கத்துல இருந்து கவனிக்க வேண்டியிருக்குன்னு சொல்லி லீவுக்கு அப்ளை பண்ணியிருக்கேன்...''

''இதுவும் சரியான காரணம்தான்...''

''மேடம்...''

''என்ன வைதேகி...?''

''ஹாங்காங் போய்ட்டு ரெண்டே நாள்ல திரும்பிடலாம் இல்லையா...?''

''ஸ்டட்டை மாத்திகிட்டதும் அங்கே வேற என்ன வேலை... அடுத்த ப்ளைட்டைப் பிடிச்சு சென்னைக்குப் பறந்து வர வேண்டியதுதான்.''

''எந்த சிக்கலும் வந்துடாதே...''

''ஒரு சிக்கலும் கிடையாது வைதேகி! பாண்டிபஜார்க்கு போய் ஷாப்பிங் பண்ணிட்டு வர்ற மாதிரிதான் இந்தக் காரியம்...''

''மேடம்..! நீங்க தர்ற தைரியத்துலதான் போறேன்.''

''இதோ பார் வைதேகி...! நாம யார் பொருளையும் திருடலை. இங்கேயிருந்து திருட்டுப் போன, அதுவும் சாமி சிலையோட கண்களிலிருந்து திருடி எடுத்துட்டுப் போன வைரங்களை மீட்டுட்டு வரத்தான் நீ போறே. உனக்குத் துணையா வந்தியத்தேவன் வருவான். அவன் கெட்டிக்காரன்.



எல்லாத்தையும் பார்த்துக்குவான். நீ வாயைத் திறந்து யார் கிட்டேயும் ஒரு வார்த்தை கூடப் பேச வேண்டியது இல்லை...'' சொன்ன தாரகேஸ்வரி இண்டர்காம் ரிஸீவரை எடுத்துக் கீழே ஒரு அறையில் இருந்த வந்தியத்தேவனிடம் பேசினாள்.

''வந்தியத்தேவன்...!''

''மேடம்...''

''வைதேகியோட பாஸ்போர்ட்டுக்கு ஏற்பாடு பண்ண பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. பாஸ்போர்ட் ரெண்டு நாள்ல என் கைக்கு வரணும்.''

''ஏற்பாடு பண்ணிடறேன் மேடம்...''

''அப்படியே ஹாங்காங் ஏர் டிக்கெட்டுக்கும் ஏற்பாடு பண்ணிடு...''

''எஸ் மேடம்...''

## 13

வெண்ணிலா டெலிபோன் ரிஸீவரைக் கையில் வைத்துக் கொண்டு திகைத்த மாதிரி நின்று கொண்டிருப்பதைப் பார்த்த சரண் பக்கத்தில் வந்தான்.

''போன் யார்கிட்டயிருந்து...?''

வெண்ணிலா ரிஸீவரின் மவுத் பீஸை இடது கையில் விரல்களால் பொத்திக் கொண்டு சரணை ஏறிட்டாள்.

''ரூபன்...''

''யார்...? நாம கண்காணிக்க வந்திருக்கோமே அந்த ரூபனா...?''

''ஆமா...''

''ரிஸீவரை இப்படி என்கிட்டே குடு...'' வாங்கிக் கொண்ட சரண், ''எஸ்...! யார் பேசறது?'' என்று கேட்டான்.

மறுமுனையில் அந்த ரூபன் சிரித்தான்.

''ஓ! மிஸ்டர் சரண்...! ரிஸீவரை நீங்க வாங்கிகிட்டீங்களா. பரவாயில்லை, உங்களுக்கும் வாழ்த்துக்கள் சொல்லிடறேன்.''

''எதுக்கு வாழ்த்துக்கள்?''

''நீங்க ரெண்டு பேரும் முதல் தடவையா ஹாங்காங் வந்திருக்கீங்களே...! அதுக்காக! அதுவும் எனக்காக இவ்வளவு தூரம் பறந்து வந்திருக்கீங்க. வாழ்த்துச் சொல்ல வேண்டாமா...?''

சரண் மௌனமாய் நிற்க, ரூபனின் குரல் தொடர்ந்தது.

''மிஸ்டர் சரண்! நீங்களும் உங்க அஸிஸ்டண்ட் வெண்ணிலாவும் எதுக்காக வந்திருக்கீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும். ஜெயக்கொடியோட டாட்டர் நிஷாவுக்கு நான் ஏற்ற மாப்பிள்ளையா இல்லையான்னு உங்களுக்குத் தெரியணும் அவ்வளவுதானே...? நாளைக்குக் காலையில ஏழு மணி சுமார்க்கு என்னோட வீட்டுக்கு வாங்க... எல்லாத்தையுமே சொல்றேன்.''

சரண் கேட்டான்.

''நாங்க இங்கே வர்றது உங்களுக்கு எப்படித் தெரியும்?''

ரூபன் சிரித்தான்.

''எனக்கு ஆயிரம் கண்கள். அதுல ஒரு கண் எப்பவுமே இந்தியா மேல இருக்கும். எனக்கு இந்த ரகசியங்கள் பிடிக்காது. ஒளிவு மறைவு வேலைகள் பிடிக்காது. நீங்ளும் உங்க அஸிஸ்டண்ட்டும் நாளைக்குக் காலையில் சரியா ஏழு மணிக்கெல்லாம் என் வீட்டுக்கு வந்துடுங்க. உட்கார்ந்து பேசுவோம். என்னைப் பத்தின சந்தேகம் எதுவாக இருந்தாலும் சரி, நீங்க கேட்கலாம். இப்போ ஃப்ளைட் ஜர்னியில ரொம்பவும் டயர்டா இருப்பீங்க. குளிச்சு ரெஸ்ட் எடுங்க...''



ரூபன் ரிஸீவரை வைத்து விட சரணும் தன் கையில் இருந்த ரிஸீவரை சாத்திவிட்டு வெண்ணிலாவைக் குழப்பமாய்ப் பார்த்தான்.

''நாம ஹாங்காங் வர்றது ரூபனுக்கு எப்படியோ தெரிஞ்சிருக்கு.''

''இப்ப என்ன பண்றது சரண்?''

''ஜெயக்கொடிக்கு போன் போட்டு இந்த விபரத்தைச் சொல்லி அவரோட யோசனையைக் கேட்கலாம்...''

''அது வேண்டாம்...''

''ஏன்...?''

''நாளைக்குக் காலையில ஏழு மணிக்கு ரூபன் அவரோட வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கார். போய்ப் பார்த்து அவர் என்ன சொல்றார்ன்னு கேட்போம். அதுக்கப்புறம் ஜெயக்கொடியைப் போன்ல காண்டாக்ட் பண்ணிப் பேசுவோம்...''

''அது சரியில்லை வெண்ணிலா...! இங்கே நடக்கிற ஒவ்வொரு விஷயத்தையும் அந்தந்த நிமிஷமே ஜெயக்கொடிக்கு தெரியப்படுத்திடணும். இல்லேன்னா நாம ஏதாவது பிரச்னையில மாட்டிக்குவோம்.''

''சரி... இப்பவே போன் பண்ணு. அதோ அந்தச் சிவப்பு போன் ஐ.எஸ்.டி. போட்டிருக்கு...''

அந்த ரிஸீவரை எடுத்தான் சரண்.

ஐ.எஸ்.டி. கோட் எண்களைத் தட்டிவிட்டுக் காத்திருந்தான். ஓவர்சீஸ் காலுக்குரிய விநோத சத்தங்கள் ஓய்ந்து முடிந்ததும் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது.

ரிங் போய்க் கொண்டிருக்க,

அரை நிமிஷ நேரத்துக்குப் பின்,

ரிஸீவர் எடுக்கப்பட்டது.

சரண் ஆர்வமாய் குரல் கொடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனையில் ஒர பெண்ணின் 'ஹலோ' குரல் பாமரத் தனமாய் கேட்டது.

''அது டைரக்டர் ஜெயக்கொடி வீடா...?''

''ஆமாங்க...''

''டைரக்டர் வீட்ல இருக்காரா?''

''இல்லீங்க...''

''எங்கே போயிருக்கார்...?''

''வெளியூர்க்கு...''

''வெளியூரா...?''

''ஆமாங்க...''

''எந்த ஊருக்கு...?''

''எனக்குத் தெரியாதுங்க...''

''சரி! நிஷா இருக்காங்களா?''

''நிஷாம்மாவும் அய்யா கூடப் போயிருக்காங்க. வீட்ல இப்போ யாருமே இல்லீங்க... வேலைக்காரங்க நாங்க மட்டும்தான் இருக்கோம்.''

''வெளியூர் போனவங்க எப்ப திரும்புவாங்க?''

''அதைப்பத்தி அய்யாவும் சரி, அம்மாவும் சரி சொல் லிட்டுப் போகலைங்க...''

சரண் எரிச்சலாய் ரிஸீவரை சாத்தி விட்டு வெண்ணிலாவைப் பார்த்தான்.



''என்ன சரண்...?''

''ஜெயக்கொடி, நிஷா, ரெண்டு பேருமே வெளியூர் புறப்பட்டுப் போயிருக்காங்களாம். இப்ப வீட்ல வேலைக் காரங்க மட்டும்தான். ரெண்டு பேரும் எந்த ஊருக்குப் போயிருக்காங்க... எப்ப திரும்பி வருவாங்க, இது மாதிரி யான விபரம் எதுவுமே, அவங்களுக்குத் தெரியலை...''

''சரி...! மறுபடி ராத்திரிக்கு போன் பண்ணிப் பார்ப்போம். ரூபனை நாளைக்குக் காலையில ஏழு மணிக்குத் தானே பார்க்கப் போறோம்...''

''வெண்ணிலா...''

''ம்...''

''எனக்கென்னமோ மனசுக்குள்ளே இப்போ லேசா ஒரு பயம் முளைவிட்டிருக்கு...''

''என்ன பயம்...?''

''ரூபன் நம்ம ரெண்டு பேரையும் அவனோட வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறது எனக்கென்னமோ சரியா படலை...''

''போய்ப் பார்த்த பின்னாடிதானே அது சரியா தப்பான்னு தெரியும்...?''

சரண் பக்கத்தில் இருந்த கட்டிலில் உட்கார்ந்து கவலை யாய் மோவாயைத் தாங்கிக் கொண்டான்.

## 14

**ஹா**ங்காங்கை நெருங்கிக் கொண்டிருந்த A1 122 விமானத்தில் எக்ஸிக்யூட்டிவ் வகுப்பில் பக்கம் பக்கமாய்

உட்கார்ந்திருந்தார்கள் வைதேகியும், வந்தியத்தேவனும் ராத்திரி வானத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது.

வைதேகியின் காதுகளில் கண் வடிவ ஸ்டட்கள் போலி வைரக்கற்களோடு மின்னியது.

எவ்வளவுதான் தைரியமாக இருக்க முயன்றாலும் அது முடியாமல் முகம் வியர்த்து வழிந்து கொண்டே இருந்தது.

வந்தியத்தேவன் புன்னகைத்தான்.

''என்ன வைதேகி! இன்னுமா மனசைப் போட்டுக் குழப்பிட்டிருக்கே...! ஹாங்காங்கை அடுத்த சில நிமிஷங்கள்ல தொடப் போறோம்...''

''வீட்லேயும் சரி... ஆபீஸிலேயும் பொய் சொல்லிட்டு இப்படி ஒரு அந்நிய தேசத்துக்குப் போறதை நினைக்கும் போது அடி வயித்துல 'குபீர்'ன்னு தீப்பிடிச்ச மாதிரி இருக்கு...''

''இனி ரெண்டு நாளைக்கு இந்தியாவை மறந்துடு.''

''முடியாது போலிருக்கே...?''

''முடியணும்...''

''வந்தியத்தேவன்...!''

''என்ன...?''

''ஹாங்காங்ல ரெண்டு நாள் வேலைதானே?''

''ஆமா...''

''நாளை கழிச்சு மறுநாள் கிளம்பிடலாம்?''

''கண்டிப்பா...''

''லேட்டாயிடாதே...?''

''ஆகாது...! உனக்குப் பக்கத்தில் இருக்கிற ஃபைபர் கண்ணாடி வழியா கீழே குனிஞ்சு பாரு வைதேகி! மனசுல இருக்கிற பயமெல்லாம் காணாமே போயிடும்.''



வைதேகி கண்ணாடி வழியே குனிந்து பார்த்தாள்.

நான்கு பக்கமும் கடல் கறுப்புப் போர்வைகளாய் அசைய நடுவே வெளிச்சக் கண்களோடு கட்டிடங்கள் தெரிந்தன.

வைதேகி கண்ணிமைக்க மறந்தாள்.

வந்தியத்தேவன் சொன்ன மாதிரி மனசுக்குள் மண்டியிருந்த எல்லாக் கவலைகளும் சட்டென்று சில விநாடிகளுக்குக் காணாமல் போயிற்று.

கோடிக்கணக்கான கார்த்திகை தீபங்கள் ஒரே நேரத்தில் ஏற்றி வைத்த மாதிரி அந்த ராத்திரி பத்து மணி வேளையில் வெளிச்ச மயம்.

''வந்தியத்தேவன்!''

''ம்...''

''அற்புதம்...!''

''இப்படியொரு காட்சியைப் பார்க்கிறதுக்காகவாவது ஹாங்காங் வரணும் இல்லையா வைதேகி...?''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே விமானம் சிறிது சிறிதாய் உயரம் இழந்து தரையிறங்க ஆயத்தமாயிற்று. வைதேகி பெல்ட்டை அணிந்து கொண்டு கீழே பார்த்தாள்.

ஹாங்காங் இப்போது வண்ண மயமான விளக்குகளால் ஒரு நவரத்தின மாலையைப் போல் ஜொலித்துக் கொண்டிருந்தது.

விமானப் பணிப்பெண் ஒலிபெருக்கியில் அறிவித்தாள். ''இன்னும் ஐந்து நிமிடத்தில் ஹாங்காங்கின் 'கை-நாக்' விமான நிலையத்தில் இறங்கப் போகிறோம். இப்போது ஹாங்காங் நேரம் 10.15. உங்கள் கடிகாரங்களை இந்த நேரத்திற்குத் திருப்பி வைத்துக் கொள்ளுங்கள்.''

அடுத்த சில நிமிஷங்களில் விமானம் ரன்வேயைத் தேய்த்து முடித்து - சகல இயக்கங்களையும் நிறுத்திக்

கொண்டு நிசப்தமாக நிற்க - விமானத்தில் இருந்த இரு நூற்று முப்பது பயணிகள் களைத்துப் போன முகங்களோடு இறங்க ஆரம்பித்தார்கள்.

வந்தித்தேவனும், வைதேகியும் கும்பலோடு கும்பலாய் கலந்து லௌன்ஞ்சுக்கு வந்தார்கள்.

''வைதேகி...!''

''ம்...''

''இப்போ கஸ்டம்ஸுக்கும், இமிக்ரேஷனுக்கும் போயிட்டிருக்கோம். அங்கே இருக்கிற அதிகாரிகள் கேட்கிற கேள்விகளுக்கு இயல்பா பதில் சொல்லணும்...'' திக்கித் திணறலா பதில் சொன்னாலோ, தேவையில்லாமே வேர்த்து வழிஞ்சாலோ அவங்களுக்கு சந்தேகம் வந்துடும்...''

''என்ன கேள்வி கேட்பாங்க...?''

''இந்த ஹாங்காங்குக்கு வர்றதுக்கு என்ன காரணம்? எத்தனை நாள் ஸ்டே...? ரிலேடிவ்ஸ் யாராவது இருக்காங்களா...? நீ போட்டிருக்கிற நகைகள் பத்தின ஒரு லிஸ்ட்... தங்கப் போகிற ஹோட்டல். இது மாதிரியான கேள்விகளுக்குப் பிறகு லக்கேஜை செக் பண்ணி பாஸ்போர்ட்ல முத்திரை குத்திட்டா... நிம்மதியா ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்துடலாம்.''

''நீங்க சொல்றதைக் கேட்டாலே பயம்மாயிருக்கு.''

''பயத்தை உதறு! இதோ! கஸ்டம்ஸ் செக்ஷன் வந்தாச்சு. எந்தக் கேள்வியைக் கேட்டாலும் தடுமாற்றம் இல்லாமல் பதில் சொல்லு போதும். இதுல முக்கியமான விஷயம்... நீ என்னோட சிஸ்டர். பேஷண்ட் ஒருத்தரைப் பார்க்கிறதுக்காக ஹாங்காங் வந்திருக்கோம். மறந்துடாதே.''

கஸ்டம்ஸ் செக்ஷன் வந்தது.



# 15

எரிச்சலாய் டெலிபோன் ரிஸீவரை சாத்தினான் சரண். நேரம் இரவு பத்தரை மணி.

''என்ன சரண்...?''

''போன்ல மறுபடியும் அதே வேலைக்காரி...! சாய்ந்தரம் என்ன பேசினாளோ அதையேதான் மறுபடியும் பேசறா. ஜெயக்கொடியும், நிஷாவும் திடீர்னு வெளியூர் கிளம்பிப் போயிருக்காங்க. எந்த ஊருன்னும் தெரியலை...''

''ஜெயக்கொடி வீட்டை விட்டுப் போகும்போது ஹாங்காங்கிலிருந்து நம்ம போன் வரும்ங்கிறதையே மறந்து போயிட்டார் போலிருக்கு...''

''இப்ப என்ன பண்றதுன்னு தெரியலையே...?''

''சரண்...''

''என்ன...?''

''ஹாங்காங் வந்து சேர்ந்துட்டோம். ஜெயக்கொடி போன்ல கிடைக்காததினால இனிமே நாமதான் டிஸிஷன் எடுத்துப் பிரச்சனைகளை ஃபேஸ் பண்ணியாகணும்...! இப்ப என்ன பிரச்னை...? ரூபன் போன் பண்ணி நாளைக்குக் காலையில ஏழு மணிக்கு அவரோட வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கார்! நாளைக்குக் காலையில ஏழு மணிக்கு ரூபனைப் போய்ப் பார்ப்போம். அவர் என்ன சொல்றார்ன்னு கேட்போம்...''

சரண் அவளை ஆயாசமாய்ப் பார்த்தான்.

''வெண்ணிலா! நீ ஒரு விஷயத்தை மறந்துட்டே?''

''என்ன...?''

"இது இந்தியா இல்லை. ஹாங்காங். டோட்டலி இது நமக்கு ஒரு அந்நியமான தேசம். ரூபன் எப்படிப்பட்ட ஆள்னு நமக்குத் தெரியாது..."

வெண்ணிலா சிரித்தாள்.

"ரூபன் எப்படிப்பட்ட ஆளாகத்தான் இருக்கட்டுமே! டிடெக்டிவ் ஏஜென்ஸியைச் சேர்ந்த நீங்களும், நானும் அந்த ரூபனை சமாளிக்க முடியாதா என்ன?"

சரண் நகம் கடித்தான்.

"நாளைக் காலைல வரைக்கும் டயம் இருக்கு. யோசனை பண்ணுவோம். ஏர்லி மார்னிங் மறுபடியும் ஜெயக்கொடிக்கு போன் பண்ணிப் பார்ப்போம்... இது அவரோட டாட்டர் மேரேஜ் சம்பந்தப்பட்ட விஷயம். அவரை ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டா தைரியமா எந்த விஷயத்தையும் டீல் பண்ணலாம்..."

சரண் சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

அறையின் கதவு படபடவென்று பலமாய்த் தட்டும் சத்தம் கேட்டது.

வெண்ணிலா முகம் மாறி சரணைப் பார்த்தாள்.

"இந்த நேரத்துல இப்படிக் கதவைத் தட்டறது யார்னு தெரியலையே...?"

சரண் எழுந்தான். கதவை நோக்கி மெல்ல நடந்தான்.

வெண்ணிலா அடித் தொண்டையில் கிசுகிசுத்தாள்.

"சரண்! ஜாக்கிரதை..."

கதவு விடாப்பிடியாய் தட்டும் சத்தம் கேட்டது.



# 16

ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார்கள் வைதேகியும், வந்தியத்தேவனும். ஹாங்காங் மின்சார வெளிச்சத்தில் திணறிக் கொண்டிருந்தது.

நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் வைதேகி.

"அம்மாடி...! கஸ்டம்ஸ் இமிக்ரேஷன் ஆபீஸர்ஸ் கேட்ட கேள்விகளுக்குத் திணறாமே பதில் சொல்லிட்டு, வெளியே வந்தாச்சு. இனிமே கவலையில்லை..."

"ஒரு கஸ்டம்ஸ் ஆபீஸர் மட்டும் உன்னோட காதுல இருந்த ஸ்டட்ஸையே பார்த்துகிட்டு இருந்தான். ஸ்டட்ஸ் அவனுக்கு வித்தியாசமாப் பட்டிருக்கலாம்..."

"எப்படியோ ஒரு பெரிய கண்டத்திலிருந்து ரிலீஃப் ஆன மாதிரி இருக்கு. இனி அடுத்து டாக்ஸியைப் பிடித்து ஹோட்டலுக்குப் போக வேண்டியதுதானே...?"

வந்தியத்தேவன் நின்றான்.

"அதுக்கு முன்னாடி ஒரு வேலை இருக்கு."

"என்ன...?"

"நமக்கு உண்மையான அந்த வைரங்களைத் தரப் போகிற மியூஸியம் சூபர்வைஸரான இந்தியர்க்கு ஃபோன் பண்ணி நாம ஹாங்காங் வந்து சேர்ந்துட்ட விபரத்தைச் சொல்லணும்..."

"மெட்ராஸ்ல இருக்கும்போதே கன்ஃபார்ம் பண்ணிட்டதா சொன்னீங்க...?"

"அவர்க்கு நாம வர்றது தெரியும். இருந்தாலும் ஒரு மரியாதைக்காக ஃபோன் பண்ணிச் சொல்லிடலாம்..."

டாக்ஸி ஸ்டாண்ட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு டெலிபோன் பூத் பார்வைக்குக் கிடைக்க இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

"அவர் பேர் என்ன...?"

"விக்ரம் பகதூர்..."

"நாம எந்த லாட்ஜ்ல தங்கப் போறோம்னு அவர்க்குத் தெரியுமா...?"

"தெரியும்."

சொன்ன வந்தியத்தேவன் கையில் வைத்துக் கொண்ட ஹாங்காங் நாணயங்களோடு விக்ரம் பகதூரை டெலிபோனில் தொடர்பு கொள்ள முயன்றான்.

ரிங் போய்க்கொண்டே இருந்ததே தவிர ரிஸீவர் எடுக்கப் படவில்லை. ஒரு ஐந்து நிமிஷ நேரம் முயற்சித்த பின் வந்தியத் தேவன் சோர்வாய் வைதேகியைப் பார்த்தான்.

"ஆள் வீட்ல இல்லை போலிருக்கே...?"

"சரி... ஹோட்டலுக்குப் போனதும் போன் பண்ணிப் பாருங் களேன்..."

இருவரும் பூத்தை விட்டு வெளியே வந்தார்கள். வரிசையில் ஒரு டாக்ஸியைப் பிடித்து ஏறி உட்கார்ந்தார்கள். அந்த சீன டிரைவர் அவர்கள் இந்தியர்கள் என்பதைப் புரிந்து கொண்டு ஆங்கிலத்தில் கேட்டார்.

"எங்கே போக வேண்டும்?"

"ஹோட்டல் சில்வர் வேவ்ஸ்?"

டாக்ஸி ராக்கெட்டாய் மாறி இறக்கைகளைக் கட்டிக் கொண்டது.



# 17

கதவு பலமாய் தட்டப்பட்டுக் கொண்டிருக்க, சரண் சற்றே வேக நடையோடு போய் கீழே மண்டியிட்டு குனிந்து சாவி துவாரத்தின் வழியாக வெளியே பார்த்தான்.

ஓவர் கோட் அணிந்து யாரோ நின்றிருப்பது தெரிந்தது.

முகம் தெரியவில்லை.

'கதவைத் திறக்கலாமா... வேண்டாமா...?'

யோசிக்க சில விநாடிகள் எடுத்துக் கொண்ட சரண் பின் ஒரு முடிவுக்கு வந்தவனாய் கதவின் லாக்கை விடுவித்து இழுத்தான்.

அவனைத் தள்ளிக்கொண்டு ஒரு உருவம் உள்ளே ஓடி வந்தது. தோள்பட்டையில் ரத்தம் தெரிந்தது.

உள்ளே ஓடிவந்த நபர்க்கு நடுத்தர வயது. தலைக்குத் தொப்பியையும், உடம்புக்கு ஓவர் கோட்டையும் கொடுத் திருந்தார். ஓடி வந்ததில் மூச்சிரைக்க சோபாவுக்குப் போய் சாய்ந்தார்.

ஆங்கிலத்தில் கத்தினார்.

"முதலில் கதவைச் சாத்தி தாழிடுங்கள்."

சரணும் பதட்டப்பட்டு என்னவோ ஏதோவென்று பயந்து போய் கதவைச் சாத்தித் தாழிட்டான்.

அந்த நபர் சோபாவுக்கு சாய்ந்து கண்களை மூடித் தோளில் காணப்பட்ட ரத்தக் காயத்தின் வலியை ஜீரணித்துக் கொண் டிருந்தார்.

சரண் அவரைப் பார்த்தான்.

முகத்தில் இந்திய வாடை.

அவர்க்குப் பக்கத்தில் போய் நின்றான். ஆங்கிலத்தில் கேட்டான்.

''யார் நீங்கள்...?''

அவர் மூடியிருந்த தன் கண்களைத் திறந்தார். தன் வறண்டு போன உதடுகளை மெல்ல அசைத்தார்.

''எல்லாம் விபரமாய் சொல்கிறேன். எனக்கு முதலில் வேண்டியது இந்த ரத்தக் காயத்துக்கான முதலுதவி.''

சரண் வெண்ணிலாவைப் பார்க்க அவள் சுவரோரமாய் வைத்திருந்த ஏர்பேக்கை நோக்கி ஓடிப் போய் பக்கவாட்டு ஜிப்பைப் பிரித்து அந்த எமர்ஜென்ஸி ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸைக் கொண்டு வந்தாள்.

பாக்ஸைத் திறந்தாள்.

வலி நிவாரணி மாத்திரைப் பட்டைகள்.

ஒரு பஞ்சு ரோல்.

ப்ளாஸ்டர். பர்னால் பேஸ்ட். டிங்க்ச்சர் அயோடின் பாட்டில்.

''ஓவர் கோட்டைக் கழற்றுங்கள்.''

கழற்றினார்.

தோள்பட்டையில் அந்த ரத்தக்காயம் தெரிந்தது. வெண்ணிலா ரத்தக் காயத்தை சுத்தம் செய்து முதலுதவியை ஆரம்பித்திருக்க, சரண் கேட்டான்.

''காயம் எப்படி ஏற்பட்டது...?''

''கத்திக் குத்து..'' அவர் சிரமமாய் பேசினார்.

''குத்தியது யார்...?''

''எனக்கு வேண்டாத ஒருவன்...''



''கத்திக் குத்து சம்பவம் எங்கே நடந்தது...?''

''இந்த ஹோட்டலுக்குப் பின்பக்கம் உள்ள ஒரு இரவு விடுதி ரெஸ்டாரெண்டில். என் மார்புக்குக் குறி வைத்துக் கத்தியை இறக்கினான். நான் சுதாரித்து விலகியபோது என் தோள்பட்டையில் அந்தக் கத்திக் குத்தி விழுந்தது. மறுபடியும் என்னைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய அவன் விடாப் பிடியாய் என்னைத் துரத்த ஆரம்பித்தான். நான் அவனிடமிருந்து தப்பி இந்த ஹோட்டலுக்குள் புகுந்து விட்டேன்.''

வெண்ணிலா அயோடின் டிங்க்ச்சரை பஞ்சில் ஊற்றி நனைத்து காயத்தில் வைத்து பேண்டேஜ் துணியால் கட்ட அவர் வலி பொறுக்க முடியாமல் பற்களைக் கடித்து முகத்தை அஷ்ட கோணலாக்கினார்.

சரண் கேட்டான்.

''அப்படியானால் உங்கள் எதிரி உங்களைத் தேடி இந்த ஹோட்டலுக்குள்ளேயும் வரலாம்...''

''ம்... வரலாம்...''

''சரி.. நீங்கள் யார்...? உங்கள் பெயர் என்ன...?''

''என் பெயர் விக்ரம் பகதூர். பிறப்பால் இந்தியன். ஆனால் வளர்ந்தது... வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருப்பது இந்த ஹாங்காங்கில்தான்.''

வெண்ணிலா குறுக்கிட்டாள்.

''நீங்கள் உடனே போலீஸ் பாதுகாப்பைத் தேடிப்போவது நல்லது... வேண்டுமானால் இங்கே இருக்கிற டெலிபோன் மூலம் போலீஸுக்கு விஷயத்தை இன்ஃபார்ம் செய்துவிடலாம்...''

''வே... வே... வேண்டாம்...''

''என்ன வேண்டாம்...?''

''என் விவகாரத்தில் போலீஸ் தலையீடு வேண்டாம்...''

''ஏன்?''

''போலீஸுக்குப் போனால் என்னுடைய உயிருக்குத்தான் ஆபத்து...''

"போலீஸுக்குப் போனால் உங்களுக்கு ஆபத்தா...? எப்படி...?"

வெண்ணிலா கேட்டுக் கொண்டிருக்கும்போதே அறைக் கதவு மெலிதாய் இரண்டு தடவை தட்டப்படும் சத்தம் கேட்டது.

விக்ரம் பகதூரின் கண்கள் பீதிக்குப் போயின. உதட்டில் வார்த்தைகள் தத்தளித்தன.

"அ.. அ... அநேகமாய்... அ.. அது... என் எதிரிதான்..."

சரண் வெண்ணிலாவிடம் திரும்பினான்.

"வெண்ணிலா...! நீ இவரை அந்த வார்ட்ரோப்புக்குப் பின்னாடி கொண்டு போய் மறைவா உட்கார வை. நான் கதவைத் திறந்து, வர்றவன் கிட்ட பேசிக்கிறேன்..."

வெண்ணிலா தலையசைத்து விட்டு விக்ரம் பகதூரை கைத்தாங்கலாய் வார்ட்ரோப்பை நோக்கிக் கூட்டிக் கொண்டு போக - சரண் தன் உடம்பின் எல்லா பாகங்களிலும் ஜாக்கிரதையை நிரப்பிக் கொண்டு கதவை நோக்கிப் போனான்.

இருதயம் தன் துடிப்பைத் தனி ஆவர்த்தனமாக மாற்றியிருந்தது.

## 18

ஓட்டல் சில்வர் வேவ்ஸ்.

முப்பத்தேழாவது மாடி. அறை எண் 3578.

இரவு பதினோரு மணி.

வைதேகி அறையின் சிட்அவுட்டில் உட்கார்ந்தபடி கீழே வெளிச்சமாய் சிதறியிருந்த ஹாங்காங்கைப் பார்த்துக் கொண்டிருக்க வந்தியத்தேவன் டெலிபோனில் தாரகேஸ்வரியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

"மேடம்...! எந்தப் பிரச்சனையும் இல்லாம வந்து ஹாங்காங் சேர்ந்துட்டோம்..."



"........"

"வைதேகியா...? நவ் ஷி ஈஸ் ஆல்ரைட்...! அந்த பயமெல்லாம் இப்போ இல்லை."

"........"

"ஆமா மேடம்...! ஏர்போர்ட்டிலிருந்தே விக்ரம் பகதூர்க்கு போன் பண்ணிப் பார்த்தேன். ரிங் போயிட்டே இருந்தது. அதுக்கப்புறம் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்ததுமே மறுபடியும் ஒரு தடவை டயல் பண்ணினேன். ஆள் கிடைக்கவில்லை."

"........"

"போன்ல ஆள் கிடைக்கலன்னா, நாளைக்குக் காலையில அவரோட வீட்டுக்கே போயிடலாம்ன்னு இருக்கோம்..."

"........"

"சரி மேடம்...! நீங்க கவலைப்படாதீங்க மேடம்! போலீஸ் காதுக்கு எந்த விஷயமும் போகாமே நான் பார்த்துக்கிறேன். நாளைக்குக் காலையில மறுபடியும் உங்களுக்கு போன் பண்றேன்..."

ரிஸீவரை வைத்த வந்தியத்தேவன் ஹாங்காங்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வைதேகியிடம் வந்தான்.

"மேடத்துக்கிட்ட பேசிட்டேன்..."

"என்ன சொன்னாங்க...?"

"அவங்களுக்கு உன்னைப் பத்தித்தான் கவலை. வைதேகி சந்தோஷமாயிருக்காளா...? சாப்பிட்டாளா...? பயப்படாமே இருக்காளா...? இதைப் பத்திதான் கேட்டுகிட்டு இருக்காங்க... வைரங்களை எடுத்துட்டுப் போறதைப் பத்திகூட இரண்டாம் பட்ச கவலைதான்..."

வைதேகி புன்னகைத்தாள்.

"என் மனசுக்குள்ளே இப்போ புது தைரியம் புகுந்திருக்கு வந்தியத்தேவன். என்ன ஆனாலும் சரி... மேடத்துக்கு சொந்தமான அந்த வைரங்களை ஹாங்காங்கிலிருந்து பத்திரமாகக் கொண்டு போய் மேடத்து கையில கொடுக்கணும்..."

''இந்த வார்த்தை போதும் வைதேகி...! ஏன்னா, இந்தக் காரியத்துல உன்னோட தைரியம்தான் முக்கியம். அரை மணி நேரம் கழிச்சு மறுபடியும் விக்ரம் பகதூர்க்கு போன் பண்ணுவோம். அவர் போன்ல கிடைக்கலைன்னா நீயும் நானும் அவரோட வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும்.''

''அவர் வீடு இந்த ஹோட்டலிலிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்...?''

''இங்கிருந்து பதினாலு கிலோமீட்டர். இடத்தோட பேர் ஓஷியானிக்... க்ளியர் அட்ரஸ் டயரியில் இருக்கு. டாக்ஸி ட்ரைவர்கிட்ட கொடுத்தா கரெக்டா ஸ்பாட்டுக்கு கொண்டு போயிருவான்.''

''நாளைக்கு எத்தனை மணிக்கு கிளம்பணும்...?''

''ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே...''

''நாம இந்த சில்வர் வேவ்ஸ் ஹோட்டல்ல தங்கற விஷயம் விக்ரம் பகதூர்க்குத் தெரியும்தானே...?''

''நிச்சயமாத் தெரியும்...''

''அப்படின்னா அவரே போன் பண்ணியிருக்கலாமே?''

''இங்க அவர்க்கு என்ன பிரச்சனையோ.. லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ...''

வந்தியத்தேவன் நெற்றியைத் தேய்த்துக்கொண்டு ஒரு பெருமூச்சோடு நாற்காலிக்கு சாய்ந்தான்.

## 19

சரண் கதவைத் திறப்பதற்கு முன்பாக வார்ட்ரோப்பை திரும்பிப் பார்த்தான்.

விக்ரம் பகதூர் கச்சிதமாய் உள்ளே பதுங்கியிருந்தார். வெண்ணிலா சைகை காட்ட, சரண் கதவின் லாக்கை விடுவித்துத் திறந்தான்.



வெளியே -

அடர்த்தியான நீலநிற யூனிஃபார்மில் - கையில் துப்பாக்கியோடு அந்த நபர் நின்றிருந்தான். சட்டையில் 'செண்ட்ரி' என்று சொன்ன பேட்ஜ்.

சரண் கலக்கமாய் திகைத்துக் கொண்டிருக்கும் போதே - அந்த நபர் துப்பாக்கியைத் தாழ்த்தியபடி சொன்னான்.

''ஸாரி ஃபார்... த டிஸ்டர்பன்ஸ் ஸார்.. ஹோட்டலுக்கு பின்புறம் இருந்த ஒரு இரவு விடுதியில் ஒரு கத்திக்குத்து சம்பவம் நடந்து விட்டது. கத்திக்குத்து பட்ட நபர் உயிர்க்குத் தப்பித்து நம்முடைய ஹோட்டலுக்குள் நுழைந்து விட்டதாக தகவல்.. நீங்கள் யாரையாவது வராந்தாவில் பார்த்தீர்களா...?''

அவன் உடைந்த ஆங்கிலத்தில் பேசிக் கொண்டு போக சரண் தலையசைத்தான். ''இல்லையே...!''

அவன் தொடர்ந்தான்.

''நான் இந்த ப்யூஜிதா ஹோட்டலுக்கு சீஃப் செண்ட்ரி. பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்துக் கொள்பவன். நீங்கள் ஹாங்காங்கிற்கு புதிதா?''

''ஆமாம்...''

''ஜாக்கிரதையாக இருங்கள். கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளேயே இருங்கள். யாராவது கதவைத் தட்டினால் திறந்து விடாதீர்கள். உங்களுக்கு ஏதாவது பாதுகாப்பு தேவைப்பட்டால் இண்டர்காம் மூலமாக ரிசப்ஷனுக்குத் தகவல் கொடுங்கள்... அகெய்ன்... அண்ட் அகெய்ன்! ஸாரி ஃபார் த டிஸ்டபன்ஸ்...''

செண்டரி ஆள் தலை தாழ்த்தி பின்வாங்கி விடைபெற்றுக் கொண்டு போய்விட - சரண் கதவைத் தாழிட்டு விட்டு உள்ளே வந்தான்.

வெண்ணிலா முகம் வியர்த்திருந்தாள்.

''சரண்....''

''ம்...''

''நாம ஹாங்காங்குள்ளே காலடி எடுத்து வெச்ச நேரமே சரியில்லை போலிருக்கு. இதென்ன வேண்டாத விவகாரம்...?''

''விவகாரம்தான்...! என்ன செய்யறது... ஃபேஸ் பண்ணியாகணும். அதுவும் பாதிக்கப்பட்ட ஆள் நம்ம இந்தியாவைச் சேர்ந்தவர். பாக்கிறதுக்கு நல்லவர் மாதிரியும் தெரியறார்... விஷயம் என்னான்னு அவர்கிட்ட கேட்டு ஏதாவது உதவி பண்ண முடியுதான்னு பார்ப்போம்...''

''சரண்! நாம ஹாங்காங்குக்கு வந்தது ஜெயக்கொடியோட விஷயத்தை கவனிக்கிறதுக்காக. ஆனா நாம இப்போ வேற வேலையைப் பார்த்துட்டிருக்கோம்...''

''சரி..! இப்போ... என்ன பண்ணலாம்ன்னு சொல்றே...?''

''விக்ரம் பகதூர்க்கு ஃபர்ஸ்ட் எய்ட் உதவி பண்ணி அவருடைய காயத்துக்குப் கட்டுப் போட்டாச்சு. இனிமே அவரை வெளியே அனுப்பிடலாம்...''

''எதிரி ஒருத்தன் அவருக்காக வெளியே காத்திட்டு இருக்கானே...?''

''அதுக்கு நாம என்ன பண்ண முடியும்... விக்ரம் பகதூரோட பிரச்சனையை அவர்தான் சால்வ் பண்ணிக்கணும்...''

''அவர்கிட்டே சொல்லிப் பார்ப்போம்...''

சரண் அறையின் மூலையில் சுவரோடு அப்பியிருந்த வார்ட் ரோப்புக்குப் போய் குரல் கொடுத்தான்.

''விக்ரம் பகதூர்! வெளியே வாங்க...''

அவர் வரவில்லை.

முப்பது விநாடிகள் பொறுத்துப் பார்த்துவிட்டு சரண் வார்ட் ரோப்புக்குள் தலையை நுழைத்து உள்ளே எட்டிப் பார்த்தான்.

கண்கள் அதிர்ச்சிக்குப் போயிற்று.

விக்ரம் பகதூர் வார்ட்ரோப்புக்குள்ளேயே கஷ்டமான கோணத்தில் மடங்கி விழுந்து மல்லாந்து கிடந்தார்.

''வெ... வெண்ணிலா...?''



''என்னாச்சு சரண்...?''

''விக்ரம் பகதூர் மயக்கமா கிடக்கிறார்... ஒரு கை பிடி! வெளியே இழுத்துப் போடுவோம்...''

''சரண்! நாம பெரிய பிரச்சனையில் மாட்டிக்கப்போறோம்...''

''பேசிட்டிருக்காதே...! ஆளை இழுத்துப் போடு.''

போட்டார்கள்.

''முகத்துல தண்ணியை அடி...!''

வெண்ணிலா அடித்தாள்.

ஆழ்ந்த மயக்கம். மூச்சு மட்டும் நூலிழையாய் வந்து கொண்டிருந்தது. சரண் நாடி பிடித்துப் பார்த்தான். சீரான ஓட்டம்.

''சரண்...! இவரோட சர்ட் பேண்ட் பாக்கெட்டுகளை சோதனை போட்டுப் பார்ப்போம். ஏதாவது அட்ரஸ் கிடைச்சா.. அந்த அட்ரஸுக்கு தகவல் கொடுப்போம்...''

''சரி.. சர்ச் பண்ணு..''

வெண்ணிலா விக்ரம் பகதூர் அணிந்திருந்த உடைகளில் தன்னுடைய தேடலை ஆரம்பித்தாள்.

இரண்டு கர்ச்சீப்புகள். ஒரு மதுபானக் கடையின் பில். சில ஹாங்காங் டாலர்கள். சிகரெட் பாக்கெட். ஒரு லைட்டர்.

பெல்ட் அணிந்திருந்த இடுப்புப் பக்கம் தொட்டுப் பார்த்த சரண் ஏதோ புடைப்பாய் இருப்பதைப் பார்த்ததும் அதை உருவி எடுத்தான்.

அது ஒரு பிளாஸ்டிக் பை. இறுக்கமாய் அதன் வாய் ஒரு கயிற்றால் கட்டப்பட்டிருக்க, அதன் முடிச்சை அவிழ்த்தான் சரண்.

உள்ளே -

பார்வைக்குக் கிடைத்தது அந்த இரண்டு ஸ்டட்களும்.

வெண்ணிலா அவைகளைக் கையில் எடுத்து ஆச்சர்யமாய் பார்த்தாள்.

''கண் 'ஷேப்'ல ரெண்டு ஸ்டட்ஸ். வித்தியாசமாயிருக்கு இல்லையா சரண்...?''

"வித்தியாசம்தான்! கண் நடுவில பார்த்தியா...? என்னமா ஜொலிக்குது...?"

"வைரமா இருக்கும்ன்னு நான் நினைக்கிறேன்..."

"ஒரு வேளை அதுக்காகத்தான் அந்த எதிரி இவரைக் கத்தியால் குத்தியிருப்பானோ...?"

"இருக்கலாம்..."

"இப்ப என்ன செய்யறது...?"

"போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணிடலாமா...?"

"இவர்தான் போலீஸ் வேண்டாம்ன்னு சொல்லியிருக்காரே..."

"வேற ஏதாவது டீடெய்ல்ஸ் கிடைக்குதான்னு பார்க்கலாம்..."

இருவரும் உடைகளை மும்முரமாய் சோதனையிட்டுப் பார்த்தார்கள்.

உபயோகமாய் எதுவும் கிடைக்காமல் போகவே விக்ரம் பகதூரின் மயக்கத்தைத் தெளிவிக்கும் முயற்சியில் வெண்ணிலாவும் சரணும் ஈடுபட்டார்கள்.

அந்த நிமிஷம் -

டெலிபோன் கூப்பிட்டது.

## 20

வந்தியத்தேவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்க வைதேகிக்கு தூக்கம் பிடிக்கவில்லை.

எவ்வளவு தைரியமாய் இருக்க முயன்றாலும் மனதின் ஒரு ஓரத்தில் கலக்கம் மூண்டிருந்தது...!

'சொன்னபடி இரண்டு நாட்களுக்குள் விக்ரம் பகதூரிடமிருந்து வைரங்களை வாங்கிக் கொண்டு மெட்ராஸ் போய்ச் சேர்ந்து விட முடியுமா?'



'இல்லை ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு இங்கேயே பத்து பதினைந்து நாட்கள் தங்கியிருக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு விடுமா?'

'அப்படியொரு சூழ்நிலை ஏற்பட்டால் ஊரில் இருக்கும் அம்மாவும், தங்கையும் தவித்துப் போய் விடுவார்களே...?'

மன உளைச்சலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மெதுவாய் எழுந்து உட்கார்ந்தாள் வைதேகி.

ஹாங்காங் அந்த நள்ளிரவு வேளையிலும் கண்ணாடித் தடுப்புக்கு வெளியே வெளிச்சப் புள்ளிகளோடு உற்சாகமாய் இருப்பது தெரிந்தது. கட்டிலை விட்டு இறங்கி கண்ணாடித் தடுப்புக்குப் பக்கத்தில் போய் நின்றாள்.

ஹாங்காங் துறைமுகத்தின் கலங்கரை விளக்கம் ஒரு குட்டிச் சூரியனைப் போல் பிரகாசித்தபடி சுழன்றது. உயரமான மாடிகளின் மேல் விமானம் மோதி விடாமல் இருப்பதற்காக சிவப்பு விளக்குகள் ஸ்லோ மோஷனில் அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருந்தன.

வைதேகி நின்ற இடத்தை விட்டு அசையாமல் அந்த வெளிச்சப் புள்ளிகளையே பார்த்துக் கொண்டிருக்க -

அவளுக்குப் பின் பக்கம் -

வெகு அருகில் காதுக்குப் பக்கத்தில் அந்த குரல் கேட்டது.

"என்ன வைதேகி...! ஹாங்காங்கை என்ன விலைக்கு வாங்கலாம்ன்னு யோசனை பண்ணிட்டிருக்கியா?"

திரும்பினாள்.

வந்தியத்தேவன்.

வைதேகி புன்னகைத்தாள்.

"தூக்கம் வரலை.. அதான்..."

"உனக்கு எதனால தூக்கம் வரலைன்னு எனக்குத் தெரியும்."

"சொல்லுங்க பார்க்கலாம்."

"திட்டம் போட்டபடி ரெண்டு நாள்ல காரியம் முடியுமா...? அந்த ஆள் விக்ரம் பகதூர் வேற காணோம். வைரங்கள் கைக்கு வருமா... வராதா... இங்கேயே பத்து பதினைந்து நாள் தங்கியிருக்கும்படியான நிலைமை வந்துடுமா? இதுதானே உனக்கு தூக்கம் வராமே போனதுக்குக் காரணம்?"

வைதேகி ஆச்சர்யப்பட்டாள்.

"எப்படி.. இவ்வளவு கரெக்டா சொல்றீங்க...?"

"எல்லாரும் கையைப் பார்த்து ஜோஸியம் சொல்வாங்க. நான் முகத்தைப் பார்த்தே ஜோஸியம் சொல்வேன்..."

"சரி...! நாம திட்டம் போட்டபடி காரியத்தை முடிச்சுட்டு ரெண்டு நாள்ல மெட்ராஸ் போயிடுவோமா இல்லையா...?"

"உண்மையைச் சொல்லட்டுமா வைதேகி?"

"சொல்லுங்க..."

"கொஞ்சம் கஷ்டம்தான்..."



## 21

கூப்பிட்டது டெலிபோன் இண்டர்காம் கனெக்ஷன். ரிஸீவரை எடுத்தான் சரண்.

"எஸ்..."

கீழே ரிசப்ஷனிலிருந்து ஒரு பெண் பேசினாள்.

"ஸார்... உங்கள் அறையில் எத்தனை பேர்?"

"இரண்டு பேர்..."

"நீங்கள் இந்தியாதானே?"

"ஆமாம்..."

"சிறிது நேரத்துக்கு முன்னால் கத்திக் குத்துப்பட்ட ஒரு நபர் உயிருக்குத் தப்பி நம் ஹோட்டலுக்குள் புகுந்த விபரம் உங்களுக்குத் தெரிந்து இருக்கலாம்..."



சரண் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் இயல்பான குரலில் சொன்னான்.

"ஆமாம்... உங்கள் ஹோட்டல் செக்யூரிடி மூலமாகத் தெரிந்து கொண்டேன்."

"இப்போது அந்த கத்திக் குத்துப்பட்ட நபரைப் பற்றி ஒரு முக்கியமான தகவல் கிடைத்திருக்கிறது..."

"எ... என்ன தகவல்...?"

"அவர் ஒரு இந்தியர்..."

"அ... அப்படியா?"

"ஆமாம்...! ஹோட்டலுக்கு பின்புறம் இருக்கும் இரவு விடுதிக்குப் போய் போலீஸார் விசாரித்த போது கத்திக் குத்து சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் விபரம் சொல்லியிருக்கார். அவர் சொன்ன விபரங்களில் முக்கியமானது. கத்திக் குத்து வாங்கிய நபரின் பெயர் விக்ரம் பகதூர். இந்தப் பெயரில் உங்களுக்கு யாரையாவது தெரியுமா இந்த ஹாங்காங்கில்...?"

"தெ... தெரியாது..."

"ஹாங்காங் போலீஸார் அது சம்பந்தமாய் ஒரு விசாரணை நடத்த இந்த ஹோட்டலில் இருக்கும் ஒவ்வொரு அறைக்கும் வந்து கொண்டிருக்கிறார்கள். போலீஸார் உங்கள் அறைக்கு வரும் போது நீங்கள் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பையும் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். உங்களுக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்லுங்கள். எக்காரணம் கொண்டும் பொய் பேசி விடாதீர்கள். ஏனென்றால் ஹாங்காங் போலீஸார் சற்றுக் கடுமையானவர்கள்."

அந்தப் பெண் பேசிவிட்டு ரிஸீவரை வைத்துவிட சரண் உறைந்து போய் அப்படியே நின்றான்.

வெண்ணிலா பக்கத்தில் வந்தாள்.

"என்ன சரண்...?"

"நவ் வீ ஆர் இன் த ட்ரேப்..."

''புரியும்படியா சொல்லு...''

சரண், ரிசப்ஷனிஸ்ட் டெலிபோனில் சொன்னதை வெண்ணிலாவிடம் சொல்ல அவளுடைய உடம்பில் நடுக்கம் தொற்றிக் கொண்டது.

''அய்யய்யோ... போலீஸா...? ஒவ்வொரு ரூமா வந்துட்டிருக்காங்களா?''

''ஆமா...''

''இந்த ஆளை என்ன பண்றது சரண்...? ஆளுக்கு சுய நினைவு இருந்தாக்கூட வெளியே போகச் சொல்லிடலாம். போதாக்குறைக்கு இந்த வைரக்கண்கள் வேற...''

''இப்பவே போலீஸைக் காண்டாக்ட் பண்ணி எல்லா விஷயத்தையும் சொல்லிடலாமா...?''

''வேற வினையே வேண்டாம். இனிமே போலீஸுக்குப் போறது அவ்வளவு புத்திசாலித்தனம் இல்லை...''

''சரி.. என்னதான் பண்றது...?''

''மொதல்ல விக்ரம் பகதூரோட மயக்கத்தை தெளிவிக்கணும். அவராகவே வெளியே போயிட்டா நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.''

இருவரும் வேகவேமாய் வார்ட்ரோப்புக்குப் பக்கத்தில் மல்லாந்து கிடந்த விக்ரம் பகதூருக்கு அருகே வந்தார்கள்.

அவர் இன்னுமும் அதே நிலைமையில் இருக்க - வெண்ணிலாவும் சரணும் மாறி மாறி அவருடைய கன்னங்களைத் தட்டினார்கள்.

''விக்ரம் பகதூர்...''

''விக்ரம் பகதூர்...''

அசைவேயில்லை.

''வெண்ணிலா...''

''ம்...''



''அந்த ப்ளாஸ்க்ல ஐஸ் க்யூப்ஸ் இருக்கும். ரெண்டு க்யூப்ஸ் எடு...''

வெண்ணிலா வேகமாய்ப் போய் அந்த ப்ளாஸ்க்கைக் கொண்டு வந்து திறந்து இரண்டு ஐஸ் துண்டங்களை எடுத்து சரணிடம் கொடுத்தாள்.

சரண் அதை வாங்கி ஒரு துண்டை எடுத்து விக்ரம் பகதூரின் அக்குள் பகுதியிலும் ஒன்றை அவருடைய தொப்புள் குழியிலும் வைத்தான்.

நிமிஷ நேரம் கூட இல்லை.

விக்ரம் பகதூரின் உடம்பில் லேசான அசைவுகள் நிகழ்ந்தன.

வெண்ணிலா மலர்ந்தாள்.

''க்ரேட் ஜாப் சரண்...''

''இன்னும் ரெண்டு ஐஸ்க்யூப்ஸை எடுத்து அவரோட நெற்றிப் பொட்டுக்களில் வை...''

வைத்தாள்.

முப்பதே விநாடி -

விக்ரம் பகதூர் கண்களை மெல்லப் பிரித்தார். வலது கையை உயர்த்தினார்.

சரண் அந்தக் கையைப் பிடித்து அவரை மெதுவாய் எழுப்பி உட்கார வைத்தான்.

''வா.. வா.. வாட்டர் ப்ளீஸ்...''

குரல் குழறிக் கொண்டு வர, வெண்ணிலா நீர் நிரம்பிய டம்ளரை நீட்டினாள்.

விக்ரம் பகதூர் வாங்கிக் குடித்து விட்டு, நெஞ்சை இடது பக்கமாய் பிடித்துக் கொண்டு சரண் மேல் சாய்ந்தார்.

வெண்ணிலா பரபரத்தாள்.

''ஸ... ஸார்.. உங்களுக்கு உடம்பு என்ன செய்கிறது?''

''நெஞ்சு வலி. மே பி... ஹார்ட் அட்டாக். இப்படி வருவது இது இரண்டாவது தடவை. அநேகமாய் நான் பிழைக்க மாட்டேன்...''

இப்போது அவர்க்கு வியர்த்துக் கொட்டியது. கண்கள் ஒரு பக்கமாய் போய் சொருகிக் கொண்டது.

வாய் குழறியது.

"எ... எனக்காக... நீங்கள் ஒரு உ... உதவி செய்வீர்களா...?"

"சொல்லுங்கள். என்ன உதவி?"

"இ... இப்போது நா... நான் சொல்லப்போகும் இந்த பெ... பெயர்களைக் குறித்துக் கொள்ளுங்கள். வ... வ.. வந்தியத்தேவன் அப்புறம்... வை.. வைதேகி. இ... இவர்கள் இருவரும் இப்போது.. ஹோ... ஹோட்டல் சில்வர் வேவ்ஸில் தங்கியிருக்கிறார்கள்..."

சரணும், வெண்ணிலாவும் திகைப்பாய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன தமிழ் பேர்களாச் சொல்றார்...?"

மூச்சுத் திணறலோடு விக்ரம் பகதூர் பேச்சைத் தொடர்ந்தார். "பெ.. பெல்ட்டைக் கட்டும் என்... இ.. இடுப்புப் பகுதியில் கண் வடிவத்தில் இரண்டு... ஸ்.. ஸ்டட்களை வை... வைத்திருக்கிறேன்... அந்த அந்த ஸ்டட்களில் ப... பதிக்கப்பட்டிருக்கிற வைரம்... இ... இந்தியாவிலுள்ள தாரகேஸ்வரிங்கிற ஜமீன்... பரம்பரைக்கு உ... உரிமையான சொத்து. ப... பல வருஷங்களுக்கு முன்னாடி.. நான்... ஒ... ஒரு தடவை இந்தியா வந்திருந்த போது.. ஜமீனுக்கு சொந்தமான அந்த கோயிலுக்குப் போனேன். எல்லார்க்கும் கடவுளாகத் தெரிந்த... அந்த சிலை என்னோட கண்களுக்கு மட்டும் கல்லாக... தெரிந்தது. சிலையின் க.. கண்களில் இருந்த வைரங்களை எப்படியாவது ஹாங்காங் கொண்டு போயிடணும்ன்னு நினைத்தேன்... பூசாரியை கொலை... செய்து சிலையின் கண்களில் இ... இருந்த வைரங்களை ஹாங்காங் கொண்டு வந்து ஒரு மியூஸியத்துக்கு விற்றேன். அதே மியூஸியத்தில் வே... வேலையும் கிடைத்தது."

விக்ரம் பகதூர் பேச்சை நிறுத்திவிட்டு சில விநாடிகள் மூச்சுக்காக திணறிவிட்டு மறுபடியும் பேச ஆரம்பித்தார்.



"நா.. நாட்கள் செல்ல செல்ல என்... ம... மனதில் அமைதியில்லை. கனவில் அ... அடிக்கடி அந்த கோ... கோயில் சிலை நினைவுக்கு வந்தது.... நீ செய்தது நியாயமா... என்று யாரோ காதுக்குள் ச... சத்தம் போடுவது போன்ற உ... உணர்வு. அந்த சி.. சிலை ஒரு பெண்ணாக மாறி உயிரோடு வந்து எ... என் முன்னாடி நின்று... என்னுடைய கண்களைக் கொடு என்று கேட்பது போல தினசரி... எனக்கு கனவு வர ஆரம்பித்தது. இந்த அவஸ்தையை... தாங்கிக் கொள்ள முடியாமல்.. மியூஸியத்தில் ஒரு பெண் சிலையின் கண்களுக்குப் பொருத்தப்பட்டிருந்த அந்த வைரங்களை எடுத்துக் கொண்டு அதே மாதிரி இருந்த போலி வைரங்களை... சிலையில் பதித்து விட்டேன். இது... இன்றளவும் அந்த மியூஸியம் உரிமையாளர்க்குக் கூட தெரியாது..."

சரணும், வெண்ணிலாவும் வியப்பில் உறைந்து போய் பார்த்துக் கொண்டிருக்க, விக்ரம்பகதூர் வியர்த்த முகத்தோடு தொடர்ந்தார்.

"அ.. அதற்குப் பிறகு... ஹாங்காங்கிலிருந்து மெட்ராஸில் இருக்கிற தாரகேஸ்வரியோடு தொ... தொடர்பு கொண்டு பேசினேன். உங்களுடைய கோயில் சிலையின்... கண்களில் பதிக்கப்பட்ட வைரங்கள்... இப்போது என்னிடம்.. இருக்கிறது... அதை உங்களிடம் சேர்ப்பித்தால்தான் என் மனம் ஆறுதலடையும். காதுகளில் கண் வடிவ ஸ்டட்களில் போலி வைரம் பதிப்பித்து ஒரு பெண்ணை அணியச் செய்து ஹாங்காங்கிற்கு அனுப்பி வையுங்கள். நான் அந்தப் பெண்ணிடம்... உண்மையான வைரங்கள் பதித்த ஸ்டட்களை கொடுத்து விடுகிறேன்... அந்தப் பெண் அவைகளை.. அணிந்து கொண்டு கஸ்டம்ஸ் கெடுபிடி இல்லாமல் மெட்ராஸ் வந்துவிடலாம் என்று சொன்னேன். தாரகேஸ்வரியும் ஒப்புக் கொண்டார். அதன்படி வைதேகி என்ற பெண்ணையும், அவளுக்குத் துணையாக வந்தியத்தேவன் என்ற ஒரு இளைஞனையும் அந்த அம்மாள் இன்று அனுப்பி வைத்துள்ளார்கள். சில்வர் வேவ்ஸ் ஹோட்

டலில் உள்ள அவர்களைச் சந்திப்பதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்த வேளையில்தான் எனக்கு வேண்டாத ஒருவன் கத்தியால் குத்தி விட்டான்...''

சரண் தன் கையில் வைத்திருந்த வைரம் பதித்த ஸ்டட் கண்களைக் காட்டினான்.

''இதுதானே... அது? உங்கள் இடுப்புப் பகுதியில் இருந்த அதை சிறிது நேரத்துக்கு முன்புதான் எடுத்தோம்...''

அவர் பார்த்துவிட்டு 'ஆமாம்' என்கிற மாதிரி தலையசைத்தார்.

வெண்ணிலா கேட்டாள்.

''உங்களைக் கத்தியால் குத்தியவன் இந்த வைரக் கண்களை அபகரித்துக் கொள்வதற்காகத்தான் அதைச் செய்தானா...?''

''இல்லை...! இந்த வைரங்கள் என்னிடம் இருப்பது அவனுக்கு மட்டுமல்ல... இந்த... ஹாங்காங்கில் இருக்கிற யார்க்குமே தெரியாது.''

''பின் எதற்காக அவன் உங்களைக் கத்தியால் குத்தினான்?''

''ப... பணம் கொடுக்கல் வாங்கலில் எனக்கும் அவனுக்கும் முன்பு ஒரு தகராறு இருந்தது. நான் இரவு விடுதியில் இருந்த போது அவனும் வந்தான்... வாய் வார்த்தை சண்டையாய் மாற திடீரென்று. அவன் என்னைக் கத்தியால் குத்திவிட்டான்... அவன் இளைஞன்... பலசாலி. அ... அவனோடு நான் போராடி ஜெயிக்க முடியாது என்கிற காரணத்தினால் உயிர் பிழைக்க.. இந்த ஹோட்டலுக்குள் நுழைந்தேன்... கத்திக்குத்து விழுந்ததில் நிறைய ரத்த சேதம்... ஏற்கனவே நான் ஒரு ஹார்ட் பேஷண்ட்.. இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நெஞ்சுவலிக்கு அறிகுறி... வரப்போகிற மாரடைப்புதான்... இ... இனி நான் உ.. உயிரோடு இருக்கப் போவது சில நிமிஷங்கள்தான்...''

சொல்லச் சொல்லவே விக்ரம் பகதூர்க்கு பெரிதாய் ஒரு மூச்சுத் திணறல் ஏற்பட்டு, தொண்டைக் குழியிலிருந்து 'க்க்ர்ர்' என்ற சத்தம் ஒன்று வெளிப்பட்டது.



வெண்ணிலா டம்ளரில் இருந்த தண்ணீரைப் புகட்ட அது உள்ளே செல்லாமல் வழிந்தது.

விக்ரம் பகதூர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பெரிதான மூச்சிரைப்புகளோடு கஷ்டப்பட்டு பேசினார்.

''நா.. நான் இந்த அறையில் இருந்தால்... நீங்கள் இரண்டு பேருமே போலீஸில் மாட்டிக் கொள்வீர்கள். இப்போது என்னால் வெளியேயும் போக மு.. முடியாது... நீங்கள் போலீஸிடமிருந்து தப்ப வேண்டுமென்றால் உ.. உடனடியாக ஒரு காரியத்தை நீங்கள் செ... செய்தே ஆக வேண்டும்...?''

''என்ன சொல்லுங்கள்...?''

''இ.. இந்த அறைக்கு பின்பக்கமாய் ஒரு சிட் அவுட் இ... இருக்கிறது இல்லையா...?''

''ஆமாம்.''

''அ.. அந்த சிட்அவுட்டிலிருந்து நேர் கீ.. கீழே ஒரு நீச்சல் குளம் இ... இருக்கிறது...''

''ஆமாம்...''

''எ..என்னை சிட்அவுட்டுக்கு கொண்டு போய் அ... அங்கிருந்து என்னை நீச்சல் குளத்தில் போட்டு விடுங்கள்.... இன்னும் சில நிமிஷங்கள் கழித்து இங்கே இறக்கப் போகிற நான் எப்படி இறந்தால் என்ன...?''

வெண்ணிலாவும், சரணும் தயக்கமாய் பார்த்துக் கொள்ள, விக்ரம் பகதூர் மூச்சிரைப்போடு தொடர்ந்தார்.

''யோ.. யோசிக்க அவகாசமில்லை. எப்படியும் இறந்து.. போகப் போகிற என்னைக் காப்பாற்ற.. முயற்சி செய்யாதீர்கள். எப்படியும் இந்த வைரங்கள் இந்தியா போய் உரியவரிடம் சேர்ந்து அந்த கடவுள் சிலையின் கண்களில் பதிய வேண்டும்... இதுவே.. என் க... டை....சி... ஆசை...''

ஆவேசமாய் பேசிக்கொண்டு போனவரின் விழிகள் சட்டென்று நின்றன. இடதுகை இருதயத்தைப் பற்றிக் கொள்ள கடைவாயில் ஒரு ரத்தக்கோடோடு சரிந்தார்.

அவரை சோதித்துப் பார்த்த சரண் வெண்ணிலாவைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான்.

''உயிரை விட்டுட்டார்.''

''என்ன பண்ணலாம் சரண்?''

''பாடி இங்கே இருந்தா ஹாங்காங் போலீஸ் கையில் நாம மாட்டிகிட்டு உள்ளே போக வேண்டியதுதான்... விக்ரம் பகதூர் சொன்னபடி அவரை நீச்சல் குளத்துக்கு அனுப்பிடறது தான் பெட்டர்.''

''மனசுக்கு கஷ்டமாயிருக்கு சரண்...''

''வேற வழியில்லை வெண்ணிலா! பாடியை வெளியேயும் கொண்டு போக முடியாது. உள்ளே இருந்தாலோ மாட்டிக் குவோம். பாடியை நீச்சல் குளத்துல தூக்கி போட்டுட்டா நாம போலீஸ் பார்வையிலிருந்து மறைந்து பாதுகாப்பான சைடுக்கு வந்துடலாம்.. விக்ரம் பகதூர் போலீஸ் பிடியிலிருந்து தப்பிக் கிறதுக்காக நீச்சல் குளத்துல குதிச்சிருக்கலாம்ன்னு போலீஸ் முடிவு கட்டவும் வாய்ப்பு இருக்கு.. நாம இப்படி சாவகாசமா பேசிட்டிருக்கிறது கூட சரியில்லை. ஹாங்காங் போலீஸ் எந்த நேரத்திலும் வந்து கதவைத் தட்டலாம்...''

''சரி! அப்படியே டிஸ்போஸ் பண்ணிடலாம்.''

இருவரும் விக்ரம் பகதூரின் உடலை இழுத்துக் கொண்டு சிட் அவுட்டை நோக்கிப் போனார்கள்.

சிட் அவுட்டின் சிறிய வராந்தாவில் உடம்பைக் கிடத்தி விட்டு கீழே எட்டிப் பார்த்தார்கள்.

கீ.. கீ.. கீழே...

இருட்டு கொட்டியிருக்க, அசையும் மரங்களுக்கு மத்தியில் அந்தப் பெரிய செவ்வக நீச்சல்குளம் வெளிச்சங்களின் மினு மினுப்போடு அசைந்தது.

''வெண்ணிலா...''

''ம்...''



''எந்த மாடியிலிருந்தாவது யாராவது நம்மை நோட் பண்றாங்களான்னு பாரு...''

வெண்ணிலா பார்வையை சுற்றிலும் துரத்திப் பார்த்துக் கொண்டிருந்த விநாடி, ''தட்.. தட்....''

அறைக் கதவு தட்டப்படும் சத்தமும், அழைப்பு மணி வீறிடும் சத்தமும் ஒன்றாய்க் கேட்டது.

சரணும், வெண்ணிலாவும் பதட்டமானார்கள்.

''போலீஸ் வந்துட்டாங்கன்னு நினைக்கிறேன்...''

''ஆளைத் தூக்கு வெண்ணிலா... லேட் செய்யற ஒவ் வொரு விநாடியும் நமக்கு ஆபத்து...''

விக்ரம் பகதூரின் உடலை இருவரும் மூச்சைப் பிடித்துக் கொண்டு தூக்கினார்கள்.

''த்தட்... த்தட்...''

கதவு தட்டப்பட்டது.

சிட் அவுட்டின் பேராபட் சுவரின் மேல் பாடியைக் கிடத்தி னார்கள்.

''ர்ர்ர்ர்ர்.''

அழைப்பு மணி வீறிட்டது.

''ம்... தள்ளு...''

விக்ரம் பகதூரின் உடலை மூச்சைப் பிடித்துக் கொண்டு ஒரு மூட்டையைப் போல் தள்ளி விட்டார்கள்.

உடம்பு அந்தரத்தில் வீசப்பட்டு வேகமாய் கீழே போயிற்று.

நீச்சல் குளத்தில் விழுந்த சத்தம்கூடக் கேட்கவில்லை.

''தட்... தட்...''


கதவு இப்போது பலமாய் தட்டப்பட்டது.

''வெண்ணிலா! முகத்தைத் தூக்கக் கலக்கத்தில் இருக்கிற மாதிரி வெச்சுக்க... இங்கிலீஷ் சரியா தெரியாத மாதிரி பேசுவோம். போலீஸ் சீக்கிரமே கழன்று கொள்வார்கள்.'' சரண் சொல்லிவிட்டு போய்க் கதவைத் திறந்தான்.

வெளியே -

எதிர்பார்த்தபடியே ஹாங்காங் போலீஸ்தான்.

சின்னக் கண்களோடு, சீன முகங்களோடு இரண்டு போலீஸ் அதிகாரிகள்.



## 22

விடிகாலை. 5.45 மணி.

ஹாங்காங் கலர்புல்லாய் விடிந்து கொண்டிருக்க, சில்வர் வேவ்ஸ் ஹோட்டலின் முப்பத்தேழாவது மாடி.

அறை எண் 3578-ல் வந்தியத்தேவனும், வைதேகியும் மோவாய்களை கையில் தாங்கி பிரமிப்போடு உட்கார்ந்திருக்க,

எதிரே -

கூடை நாற்காலிகளில் கப் அண்ட் சாஸர்களில் டீ குடித்தபடி வெண்ணிலாவும், சரணும் சாய்ந்திருந்தார்கள்.

வைதேகி பிரமிப்பு விலகாமல் கேட்டாள்.

''அப்புறம்...?''

சரண் ஒரு வாய் டீயை விழுங்கிவிட்டுச் சொன்னான்.

''அப்புறமென்ன...? ஹாங்காங் போலீஸ் அதிகாரிகள் ரெண்டு பேர் வந்தாங்க. விக்ரம் பகதூர்ங்கிற பேர்ல யாரையாவது தெரியுமான்னு கேட்டாங்க. தெரியாதுன்னு சொன்னோம். மேற்கொண்டு கேள்விகளை கேட்டுகிட்டு இருக்கும்போதே ஒரு போலீஸ் காப் வந்து மேலயிருந்து யாரோ ஒருத்தர் நீச்சல் குளத்துல விழுந்திருக்கிற விஷயத்தைச் சொன்னதும் எங்களை விசாரிக்கிறதை விட்டுட்டு உடனே கிளம்பிப் போயிட்டாங்க... நாங்க காலையில அஞ்சு மணிக்கு உங்களைப் பார்க்கிறதுக்காக ஹோட்டலை விட்டு வெளியே வரும்போது போலீஸோட கேஸ் கோணமே மாறிப் போயிருந்தது...''



''எப்படி...?''

''போலீஸுக்குப் பயந்துதான் விக்ரம் பகதூர் மாடியிலிருந்து கீழே குதிச்சு தற்கொலை பண்ணிகிட்டார்ன்னும், ஏற்கெனவே கத்திக் குத்து வாங்கின அவர் எதிரிக்குப் பயந்தும் கீழே குதிச்சிருக்கலாம்ன்னும் ரெண்டு விதமா கோணம் அமைச்சு என்கொய்ரி பண்ணிட்டிருக்காங்க. இந்த ரெண்டுல ஏதாவது ஒண்ணு சீக்கிரமே முடிவாகும்...''

''விக்ரம் பகதூர் பல வருஷங்களுக்கு முந்தி பண்ணின தப்புக்காக இப்போ பிராயச்சித்தம் பண்ணிக்கிட்டார்.''

வைதேகி கண்களில் நீர் நிறைந்து சந்தோஷித்தாள்.

''எப்படியோ வைரம் கைக்கு வந்தாச்சு... இனிமே நாம இந்தியாவுக்குப் பறந்துடலாம் இல்லையா...?''

வந்தியத்தேவன் சிரித்தான்.

''மிஸ்டர் சரண்! நாங்க வைரங்களுக்காக வந்தோம். ஆனா கஷ்டப்பட்டது நீங்கதான். நாங்க ஏதோ கல்யாணத்துக்கு வந்து முகூர்த்தத்தை முடிச்சுட்டுப் போற மாதிரி இருக்கு... உங்களுக்கும் வெண்ணிலாவுக்கும் நாங்க காலம் பூராவும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கோம்.''

''இதுல நன்றி சொல்ல என்ன இருக்கு? நம்ம நாட்டுக்குச் சொந்தமான ரெண்டு வைரங்களை... அதுவும் தெய்வச் சிலையின் கண்களில் இருந்த வைரங்களை மீட்டதில் ஒரு சந்தோஷம் கிடைச்சிருக்கு. இந்த ஒரு சந்தோஷமே போதும்...''

வைதேகி குறுக்கிட்டுக் கேட்டாள்.

''நீங்க ரெண்டு பேரும் ஹாங்காங்குக்கு எதுக்காக வந்தீங்கன்னு சொல்லவேயில்லையே...?''

வெண்ணிலா சிரித்தாள்.

''இதுல இனிமே ஒளிவு மறைவு என்ன இருக்கு? சினி ப்ரொட்யூஸர் ஜெயக்கொடி தன்னோட பொண்ணு நிஷாவுக்காக இங்கே ஹாங்காங்கில் ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்

கார். அவர் பேர் ரூபன். அந்த ரூபன் எப்படிப்பட்டவர்? ஆள் குடிகாரனா...? ஸ்த்ரீ லோலனான்னு பார்த்து அப்ஸர்வ் பண்ற துக்காக வந்தோம். வந்ததுமே ஒரு ஷாக் நியூஸ்...''

''என்ன?''

''வந்ததும் வராததுமா... அந்த ரூபனே போன் பண்ணி வெல்கம் டு ஹாங்காங்ன்னு சொல்றான். காலையில ஏழு மணிக்கு ரெண்டு பேரும் வந்து என்னைப் பாருங்கன்னு சொல்லியிருக்கான். உங்ககிட்ட பேசிட்டு இப்போ அங்கே தான் போகப் போறோம்...''

''அப்படீன்னா... நீங்க இந்தியாவுக்கு எப்போ ரிடர்ன்...?''

''ஏழு மணிக்கு ரூபனைப் போய்ப் பார்த்தாத்தான் அதுவும் தெரியும்...''

''சரி... இப்ப நீங்க போய் ரூபனைப் பார்த்து விபரம் என்னான்னு தெரிஞ்சுகிட்டு எனக்கு போன் பண்ணுங்க. இந்தியாவுக்குப் போக ஒண்ணாவே ப்ளைட் டிக்கெட் புக் பண்ணிடலாம்...''

''எங்களுக்கும் அதே முடிவுதான்...''

சரணும், வெண்ணிலாவும் எழுந்தார்கள்.

ஹாங்காங்கின் கிழக்குத் திசை இப்போது தோல் சீவிய பீட்ரூட் நிறத்துக்கு போயிருக்க -

சாலைகளில் வாகனச் சுறுசுறுப்பு தெரிந்தது.

## 23

சரியாக ஏழு மணிக்கெல்லாம் சரணும், வெண்ணிலாவும் ரூபனின் வீடு போய்ச் சேர்ந்து வேலையாளால் வரவேற்கப் பட்டு சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள்.

7.15-க்கு ரூபன் வந்தான்.



வயது முப்பது இருக்கலாம். ஒரு ஹி - மேன் தோற்றம். காது மடல்களிலும், மூக்கு நுனியிலும் வெளிநாட்டு சிவப்பு தெரிந்தது. பிடரி வழிய வழிய சுருண்ட கேசம்.

''வாங்க மிஸ்டர் சரண் அண்ட் மிஸ் வெண்ணிலா!'' என்று சொல்லிச் சிரித்தபோது வலது கன்னத்தில் சின்னதாய் ஒரு குழி உற்பத்தியாகி சட்டென்று மறைந்தது.

''ஸாரி... நான் பதினஞ்சு நிமிஷம் லேட்...''

''பரவாயில்ல ஸார்...''

''காபி சாப்பிடறீங்களா...?''

''வேண்டாம் ஸார்! நீங்க எதுக்காக எங்களை கூப்பிட் டீங்கன்னு தெரிஞ்சுக்க ஆர்வமாயிருக்கோம்...''

ரூபன் சிரித்தான்.

''ஷ்யூர்... ஷ்யூர்...! அதைச் சொல்லத்தானே உங்களைக் கூப்பிட்டிருக்கேன். பை த பை மிஸ்டர் சரண்! நீங்களும், உங்க அஸிஸ்டெண்ட் வெண்ணிலாவும் என்னை அப்ஸர்வ் பண்ணப் போகிற விஷயம் நீங்க மெட்ராஸ்ல ஃப்ளைட் ஏறின பின் னாடி தான் எனக்குத் தெரிஞ்சது. எனக்கு முதலிலேயே அந்த விஷயம் தெரிஞ்சிருந்தா நீங்க ஹாங்காங் வந்திருக்க வேண் டிய அவசியமே இருந்திருக்காது. போன்லயே எல்லாத்தை யும் பேசி முடிச்சிருப்பேன்...''

சரண் குழப்பமாய்ப் பார்க்க -

ரூபன் தொடர்ந்தான்.

''உங்களையும், வெண்ணிலாவையும் ஹாங்காங்க்ல என் பின்னாடியே அலைக்கழிக்க நான் விரும்பலை. நீங்க மிஸ்டர் ஜெயக்கொடிக்கு ரிப்போர்ட் தர்றதைக் காட்டிலும் நானே ஒரு ரிப்போர்ட் கொடுத்தா அது இன்னமும் பவர்ஃபுல்லா இருக்கும்ன்னு தான் நினைக்கிறேன்.''

''ஸார்...''

''இதோ... என்னோட ரிப்போர்ட்.''

ரூபன் தன் சர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ஒரு லெட்டரை எடுத்து நீட்டினான்.

சரண் அதைத் தயக்கமாய் வாங்கிப் பிரித்து அதில் எழுதப் பட்டிருந்த வார்த்தைகளின் மேல் பார்வையைப் போட்டான்.

அன்புள்ள திரு. ஜெயக்கொடி அவர்களுக்கு,

வணக்கம்.

ரூபன் எழுதிக்கொண்டது.

உங்களுக்குப் பிடித்த மாப்பிள்ளையைக் காட்டிலும் உங்கள் மகளுக்குப் பிடித்த மாப்பிள்ளையைத் தேர்வு செய்வதுதான் நல்லது.

பணம், அந்தஸ்த்து இந்த இரண்டையும் துச்சமாய் மிதித்துக் கொண்டு வருவதுதான் காதல்.

இந்த மாதிரியான காதலுக்கு வீரியம் அதிகம்.

உங்கள் மகள் நிஷா அப்படியொரு வீரியக் காதலுக்கு சொந்தக்காரியாக இருக்கிறாள்.

அவள் ஒரு டாக்ஸி ட்ரைவரை காதலிக்கிறாள்.

கோபப்படாமல், சினிமா வில்லத்தனம் காட்டாமல் அவளுடைய காதலை வாழ வையுங்கள்.

அழைப்பிதழ் அனுப்பி வையுங்கள்.

அவசியம் திருமணத்துக்கு வருவேன்.

இப்படிக்கு
ரூபன்

கடிதத்தைப் படித்து முடித்த சரண் வியப்பு விழிகளோடு ரூபனை ஏறிட்டான்.

''ஸார் இதெல்லாம்.. உங்களுக்கு?''

''எப்படித் தெரியும்ன்னு கேட்கறீங்களா? ஜெயக்கொடி வீட்ல வேலைக்கு இருக்கிற ஒரு நபர் எனக்கு வேண்டப் பட்டவர். அவர் மூலமாத்தான் எனக்கு எல்லா விஷயமும் தெரியும். நீங்க ரெண்டு பேரும் ஹாங்காங் புறப்பட்டதும் எனக்கு அவர் ஓவர்சீஸ் கால் மூலமா எல்லாத்தையும் சொல் லிட்டார். நீங்க இங்கே வர்றதுக்கு முன்னாடியே நான் இந்த



லெட்டரை எழுதி வெச்சுட்டேன். ஒரு ஜோக்குக்காக போன்ல உங்களைப் பயமுறுத்தற மாதிரிப் பேசினேன்...''

''ஸார்... யூ ஆர் கிரேட்! ஆனா இந்த லெட்டர்க்கு ஜெயக்கொடி மதிப்பு கொடுப்பாரா...?''

''கண்டிப்பா கொடுப்பார்...! அவர் இப்போ தன் பெண் ணோட வெளியூர் போயிருக்கிறதாக தகவல். அவர் ஊரி லிருந்து வந்ததும் நானே போன்ல பேசறேன்...''

''தேங்க்யூ ஸார்...''

சரணும், வெண்ணிலாவும் எழுந்தார்கள்.

ரூபன் கேட்டான்.

''எப்போ இந்தியாவுக்குப் பயணம்...?''

''இன்னிக்கே ஸார்...''

''ஏன் என்னோட விருந்தாளியா வாரம், பத்து நாள் தங்கி ஹாங்காங்கைப் பார்த்துட்டுப் போலாமே...?''

''வேண்டாம் ஸார்...! நாங்க எந்த வேலைக்காக வந் தோமோ அந்த வேலை முடியாமே போனாலும் வேற ஒரு வேலை முடிஞ்சதுல மனசுக்கு ரொம்பவும் சந்தோஷம் ஸார். உடனே இந்தியாவுக்குப் போகணும் போலிருக்கு...''

''ஒக்கே! விஷ்யூ ஆல் த பெஸ்ட்... சென்னை வந்தா உங்களைப் பார்க்கிறேன்...''

ரூபன் கைபிடித்துக் குலுக்க, வெளியே வந்தார்கள்.

ஹாங்காங் தன் பரபரப்பான வாழ்க்கையைத் துவங்கியிருந்தது.

''வெண்ணிலா...''

''என்ன சரண்?''

''ஒரு டெலிபோன் பூத்திலிருந்து வந்தியத்தேவனுக்கு போன் பண்ணி அவங்க போற ஃப்ளைட்லயே நமக்கும் டிக்கெட் புக் பண்ணச் சொல்லு.''

''உத்தரவு...''

என்று சொல்லிச் சிரித்தாள் வெண்ணிலா.

ஸ்ரீ